# எழுநிலம்

மாத இதழ் மணம்- 6 செப்டெம்பர் 2021 திருவள்ளுவர் ஆண்டு 2052








## பசியுடன் இருக்கிறான் பார்த்தீபன்



ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை சொல்லாடார் சோர விடல்

# எழுநிலம்

செப்டெம்பர் 2021

தொடர்புகளுக்கு:

ezhunilam@yahoo.com

## திருக்குறள்



குறள் 818:

ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்

பொருள்:

முடியும் செயலையும் முடியாத படி செய்து கெடுப்பவரின் உறவை, அவர் அறியுமாறு ஒன்றும் செய்யாமலே தளரச் செய்து கைவிட வேண்டும்.

# நலன்சார் அரசியல்

ஒரு நாடு விடுதலை பெறும்போது, அந்த நாடு தன்னுடைய விடுதலைப் போராட்டத்தினால் விடுதலையடைந்தது என்றோ, அல்லது அம்மக்களிற்கு நீதி கிடைப்பதற்காக விடுதலையடைந்தது என்றோ மட்டும் கருத முடியாது. புவிசார் அரசியலில், பலம் வாய்ந்த நாடுகள் தங்கள் நலன்சார் அரசியலுக்காக காய் நகர்த்தும்போது, அவர்களுக்கு உபயோகமாகவிருக்கும் சில நாடுகள் தனி நாடாகுவது தமக்கு சாதகமாக அமையும் என்ற நிலையில், அதற்கான வாய்ப்புகள் உருவாக்கப் படுகின்றன. அந்த வகையில் தமிழர்களின் தாயகம் உருவாகுவதற்கான புவிசார் சூழ்நிலை ஒன்று சர்வதேச மட்டத்தில் திரண்டு வருவதான சிந்தனை பேசு பொருளாக உள்ளது.

தமிழர்களுக்கான எந்தத் தீர்வை எடுப்பதாக இருந்தாலும், இந்தியாவைப் புறக்கணித்துவிட்டு செய்ய முடியாது. அதற்கு எந்த நாடுகளும் தயாராக இல்லை என்பதை இந்து சமுத்திரப் பிரதேச புவிசார் அரசியல் தெளிவாக உணர்த்துகின்றது. மொழிவாரியான மாவட்டங்கள் தமிழர் தாயகம் என்பதை இந்தியா வற்புறுத்தினால், மொழிவாரி மாநிலங்கள் தனிநாடு கேட்கும் அபாயம் இந்தியாவில் எழுந்துவிடும். அதை இந்தியா அனுமதிக்க மாட்டாது. இந்தியாவிற்கு ஈழத் தமிழர்களின் உதவி தேவை என்ற நிலை வரும்போது, எங்களால் எங்கள் நிலையில் இறுக்கமாக இருந்து கொண்டு பேச்சுவார்த்தை நடத்த முடியும். இப்போது நிலைமை அப்படியல்ல. நாங்களாகப் போய் நிற்கும் போது, தருவதை வாங்க வேண்டிய நிர்ப்பந்த அரசியலுக்குள் தள்ளப்பட்டு விடுகிறோம். இந்தியா அரைத்த மாவையே அரைக்கப் போகின்றது என்பதில் ஐயமில்லை.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் கை ஓங்குவதை மேற்குலகத்தினால் - குறிப்பாக அமெரிக்காவினால் சகித்துக் கொள்ள முடியாது. இரு தசாப்தங்களின் பின், ஆப்கானை தலிபான்கள் வசம் விட்டு அமெரிக்கா வெளியேறி இருக்கிறது. இலங்கையில் திருகோணமலைத் துறைமுகத்தையும் சூழவுள்ள 33,000 ஏக்கர் நிலத்தையும் அமெரிக்கா இரகசியமாகக் குத்தகைக்கு எடுத்திருப்பதாக இலங்கை

# யாருக்கு ஆதாயம்?

## ஆசிரியர் பக்கம்

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் செய்தி கசிய விட்டுள்ளது. இவையெல்லாம் அமெரிக்கா தனது யுக்தியை மாற்றி, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தன்னுடைய நிலையை நிலைநிறுத்துவதற்காக, ஆப்கானை விட்டு விலகி இலங்கையை தளமாக்க திட்டமிட்டு இருப்பதையும், அதன்மூலம் சீனாவை நெருக்கடிக்குள் தள்ள முனைவதையும் எடுத்துக் காட்டுகின்றன.

இவற்றினால் ஈழத் தமிழர்களிற்கு ஆதாயம் எதுவுமில்லை. ஆனாலும் பிரச்சனை எதுவும் எழாமல் சுமுகமாக காய் நகர்த்த நினைக்கிறது அமெரிக்கா. இன்னொரு புறத்தில், சுமந்திரனும் பீரிசும் அமெரிக்க தூதுவரை சாட்சியாக வைத்து நடத்திய இரகசியப் பேச்சுவார்த்தையும், அமெரிக்க காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட 'வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம்' என்ற அதிகாரம் எதுவுமற்ற தீர்மானமும் ஈழத் தமிழர்களிடையே கிளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் காரணம் காட்டி GSP வரியை நிறுத்தப் போவதாக ஐரோப்பிய யூனியன் இலங்கைக்கு பயம் காட்டுகின்றது. பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் இலங்கையால் அதை மீற முடியாது. இவை எல்லாமுமே இலங்கை உலகநாடுகளின் பிடிக்குள் சிக்கித் தவிப்பது போலவும் உலக நாடுகள் எல்லாம் இணைந்து தமிழீழத்தை பெற்றுத் தரப்போவது போலவும் ஒரு பிரமையை ஈழத் தமிழர்களுக்கு ஏற்படுத்தக்கூடும். செப்டெம்பரில் ஜெனிவாவில் மனித உரிமைகளுக்கான கூட்டத் தொடர் ஆரம்பிக்கவுள்ளது. காணாமற் போனோர் தொடர்பான சாட்சியங்களை ஆவணப்படுத்தலுக்கான நிதி ஒதுக்கீடும் கிடைக்கப் பெற்ற நிலையில் இம்முறை இலங்கையின் இனப் படுகொலையை உறுதிப்படுத்த முடியும் என்ற தமிழர்களின் நம்பிக்கை பிசுபிசுத்துப் போவதற்கான வாய்ப்புகளும் அதிகம். தமிழர்களுக்கு தீர்வு கிடைக்க இருப்பதான சூழ்நிலையை உருவாக்கிய அதே உலகநாடுகள் சிங்களத்தையும் சிங்களர்களையும் திருப்திப்படுத்த இனப்படுகொலை விவகாரத்தில் மீண்டும் நழுவல் நிலையைக் கடைப்பிடிக்கவும் அதிக வாய்ப்புள்ளது.

தீர்வு என்ற பெயரில் தமிழர்களையும், மனித உரிமைகள் விவகாரத்தில் கண்டும் காணாமலும் இலங்கையையும் மேற்குலகம் திருப்திப்படுத்தும் என்று நம்ப இடமுண்டு. திருகோணமலையையும் சூழவுள்ள இடங்களையும் கொடுப்பது உண்மையானால் இலங்கை காப்பாற்றப்படலாம். இதற்கிடையில், யார் குற்றினாலும் சரி, தமிழர் தரப்பில் யார் பிரதிநிதி என்பதில் கடுமையான போட்டி ஆரம்பித்துவிட்டது. 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும்' என்று முழங்கிய திலீபன் தன்னை ஆகுதியாக்கி இந்த வருடத்துடன் 34 ஆண்டுகள் நிறைவடைகின்றன. திலீபனின் கனவு கனவாகவே போய்விடுமா? இழப்பதற்கு இனி எதுவுமில்லை என்ற நிலையில் தினம் தினம் அவலப்படும் எம் மக்களுக்கான தீர்வுக்கு, மற்றவர்கள் விடுதலையைப் பெற்றுத் தருவார்கள் என்று நம்பியிராமல் எமக்கான சரியான அரசியற் பாதையில் நகர்வது மிக முக்கியமானது.

இந்திய இராணுவத்துடன் மோதுவதற்கு முடிவெடுத்த வேளையில், வெற்றி தோல்வி என்ற பிரச்சனைபற்றி நான் அலட்டிக்கொள்ளவில்லை. இந்த யுத்தத்தை எதிர் கொள்ளும் உறுதியும் துணிவும் எம்மிடம் உண்டா என்பது பற்றியே சிந்தித்தேன். தோல்வி ஏற்படலாம் என்ற அச்சத்தில் ஒரு மக்கள் இனம் தனது இலட்சியத்தையும் உரிமையையும் விட்டுக்கொடுப்பதில்லை.

– தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன்



# தியாக தீபம் திலீபன்









அந்தப் பன்னிரு நாட்களும் திலீபன் உண்ணா-நோன்பிருந்த மேடையைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்த திலீபனின் தந்தையார் இராசையா ஆசிரியர் முதன் முதலாக மேடையில் ஏறி திலீபனின் உடல் மீது விழுந்து கதறி அழத் தொடங்கினார். உடனடியாக திலீபனின் மரணச் செய்தி இந்திய அதிகாரிகளோடு பேச்சுவார்த் தையில் ஈடுபட்டிருந்த தேசியத் தலைவருக்கு அறி விக்கப்பட்டது.

திலீபனின் மரணச் செய்தி கிடைத்த மறு கணமே தேசியத்தலைவர் பேச்சுவார்த்தையை நிறுத்தி விட்டு திரும்பி இருந்தார். செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் காலை 9.45 மணியளவில் மலர்ந்த முகத் தோடு உண்ணாவிரத மேடையில் அமர்ந்த திலீ-பன் 12 நாட்கள் இடைவெளியில் நம்மையெல்லாம் விட்டுப் பிரிவான் என்று நாம் யாருமே நினைத்தும் பார்த்திருக்கவில்லை.

தியாகதீபம் திலீபன் எதற்காக அந்த உண்ணா-நோன்பை ஆரம்பித்தான்? ஒரு கணம் சிந்தித் துப் பார்ப்போம்! 1987 ஜூலை 29ஆம் நாள் இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஜே.ஆருக்கும் ராஜீவ் காந்தி க்கும் இடையில் கைச்சாத்தானது. அந்த ஒப்பந் தத்தின் பின் நாம் விரும்பாத பல நடவடிக்கைகள் இடம் பெற்றன. ஆயுத ஒப்படைப்பு என்ற பெயரில் புலிகள் தங்களதும், தமிழீழ மக்களினதும் பாதுகா ப்புக்கென வைத்திருந்த ஆயுதங்களை இந்திய இராணுவம் நயவஞ்சகமாக பெற்றுக் கொண்டது.

இந்தியாவை நம்பி புலிகள் ஆயுதங்களை ஒப்-படைத்த அதேவேளை EPRLF, TELO, ENDLF போன்ற அமைப்புக்களுக்கு ஆயுதங்களை வழங்கிக் கொண்டிருந்தது இந்தியா. இந்தியா கொடுத்த ஆயுதங்களை வைத்துக் கொண்டு புலிகளையும் அவர்களது ஆதரவாளர்களையும் அந்த அமை-ப்புக்கள் தாக்கத் தொடங்கின. அதே காலப் பகுதி யில் தமிழீழத்தின் எல்லைப் புறங்களில் புதிது புதி தாக சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. பொலிஸ் நிலையங்கள் புதிது புதிதாக திறக்க-ப்பட்டன.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் நடைமுறைப்படுத் தப்படாமல் தமிழ் மக்களுக்கு விரோதமான நடவ-





டிக்கைகள் இடம் பெற்றதனால், இந்திய அரசின் ஓரவஞ்சனையான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே திலீபன் காந்திய வழியில் தான் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக முடிவெடுத்து தேசியத் தலைவரின் அனுமதியை பெற்றுக் கொண்டே அந்த தியாக வேள்வியை ஆரம்பித்திருந்தான். தான் இறந்தால் தனது உடல் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மருத்துவ ஆராய்ச்சிக்காக ஒப்படைக்கப்பட வேண்டும் என முன்பே திலீபன் தனது விருப்பத்தை தெரிவித்திருந்தார்.

அவரது விருப்பிற்கு அமைய திலீபன் பிறந்த மண்ணில் இருந்து அவரது உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு சுதுமலை அம்மன் ஆலய முன்றலில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதி வைத்திய கலாநிதி திரு. சிவ ராஜா அவர்களிடம் திலீபனின் உடல் மற்றும் தேசியத் தலைவர் அவர்களின் கையொப்பத்துடன் கூடிய கடிதமும் ஒப்படைக்கப்பட்டது.

கேணல் சங்கர் மற்றும் தேவர் அண்ணா ஆகியோர் கடிதம் அடங்கிய கோப்பினை கையளித்தனர். தியாக தீபம் திலீபன் உட்பட்ட பல்லாயிரம் மாவீரர்கள் தமிழீழம் என்று மலரும் என்ற ஏக்கத்தோடு வானத்தில் காத்திருக்கின்றனர். நாம் என்ன செய்யப் போகின்றோம்?

-தேவர் அண்ணா










# பசியுடன் இருக்கிறான்
# பார்த்தீபன்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான போராளிகள் தமது இன்னுயிரை ஈந்து விடுதலைக்கு விதையாகியுள்ளனர். அவர்களுக்கு மத்தியில், ஆயுதப் போராட்டத்திற்கான அறநெறி அகிம்சையில் இருந்துதான் பிறந்தது என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டிய மாவீரன் திலீபன்.

யாழ் ஊரெழுவில் 27.11.1963 அன்று பார்த்திபனாகப் பிறந்தவர், அடக்கு முறைக்கு எதிராக போராடியே ஆகவேண்டும் என்ற காலத்தின் கட்டாயத்தினால் விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து திலீபன் ஆகினார். புடம் போடப்பட்ட சிறந்த ஒரு ஆயுதப் போராளியாக மட்டுமல்லாமல், அரசியற்துறைப் பொறுப்பாளராகவும் இருந்தார் திலீபன்.

1987 இல் ஜெயவர்த்தனா - ராஜீவ் காந்தி ஒப்பந்தத்தை (இலங்கை - இந்திய ஒப்பந்தம்) அடுத்து, அமைதிப்படை என்ற போர்வையில் இந்தியப்படை எமது தாய் மண்ணில் காலடி எடுத்து வைத்தது. எமது பாதுகாப்பிற்காக தூக்கப்பட்ட ஆயுதங்கள் விடுதலைப்புலிகளிடமிருந்து களையப்பட்டன. பாரதப் படைகள் எமக்கு நல்லது செய்யப் போவதில்லை என்பதை அவர்கள் வழியிலேயே உலகிற்கு உணர்த்த வேண்டிய தேவையை அரசியற்துறைப் பொறுப்பாளரான தானே முன்னெடுக்க வேண்டும் என்று முடிவெடுத்தார் திலீபன்.

நீர்கூட அருந்தாத உண்ணாவிரதப் போராட்டத்துடன் தன் கோரிக்கைகளை முன்னெடுக்க முடிவெடுத்தார். தேசியத் தலைவருக்கு இதில் துளிகூட விருப்பம் இருக்கவில்லை. நீண்ட ஆலோசனைகள், விவாதங்களின் பின் தலைவரின் அனுமதி கிடைத்தது.

15.09.1987 அன்று, தாயகத்தில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையினரிடம் 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தொடர் உண்ணா விரதத்தை ஆரம்பித்தார் திலீபன்.

## இந்தியப் படையினரிடம் திலீபன் முன்வைத்த 5 அம்சக் கோரிக்கைகள்

1. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, இன்னமும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.
2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
3. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
4. வடக்கு கிழக்கு மாகாணங்களில் காவல் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
5. இந்திய அமைதிப் படையின் மேற்பார்வையில், ஊர்காவற்படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு, தமிழ்க் கிராமங்கள், பாடசாலைகளில் குடிகொண்டுள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளுடன், துளி நீர்கூட அருந்தாத தன் உண்ணா நோன்பில் உறுதியாக இருந்தார் திலீபன். பாரதம் கண்டுகொள்ளவில்லை. உடல் நிலை படிப்படியாக உருக்குலைந்தது. கும்பி கொதித்து வாடி வதங்கியபோதும் அவரின் உறுதி தளரவில்லை. உண்ணாவிரத நேரத்தில், கதறி அழுத மக்கள் வெள்ளத்தைப் பார்த்து மூன்று முறை உரையாற்றிய திலீபன், மூன்று முறையும்

“எனது மக்கள் விடுதலை அடைவார்கள் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். பூரண திருப்தியுடன் உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.”

என்று தளராத உறுதியோடு தெளிவாகத் தெரிவித்திருந்தார்.

அகிம்சை வழியில், உலகிற்கே எடுத்துக்காட்டாக, நீர்கூட அருந்தாது 12 நாட்கள் தன்னை உருக்கிய திலீபன் 26.09.1987 அன்று காலை 10.48 இற்கு தன்னை ஆகுதியாக்கினார். 34 வருடங்கள் கடந்தும், தமிழ் மக்களுக்கான எந்தக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படவில்லை. மக்களுக்கான தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில், திலீபன் இன்னமும் பசியுடன்தான் இருக்கிறார்.





# நான் அறிந்த திலீபன்

திலீபனே எங்கள் திருமகனே -எம்
சிந்தையில் வாழும் குலமகனே
பாரத அரசின் பொய் முகம் காட்ட
பட்டினி தீயில் வெந்தவனே
உன் பெருமையுரைக்க என்
நாவிற்கு திறனில்லை
அடக்கம் என்பதன் மறுவடிவம்
அன்று கண்டேன் உன் வடிவில்

அந்தஸ்து பதவி இருந்தாலும்-உன்
தோழர் மத்தியில் குழந்தையடா
கண்டிப்புகடமையில் மட்டுமே
கனிவாக சொல்வாயே எங்களுக்கு
மக்கள் மனதில்உந்தன் இடம்
காணும் சந்தர்ப்பம் எந்தனுக்கு
போரினில் காயமுற்று நீ
படுத்தாய் யாழ் வைத்தியசாலையிலே
மக்கள் வெள்ளம் கண்ணீருடன்
திரண்டனர் உனை பார்ப்பதற்கு
காயத்தின் வேதனை தனை மறைத்து
புன்னகை புரிந்தாய் வந்தவர்க்கு

உன் பெருமையுரைத்திட -என்
நாவொன்று போதாது
எளிமைக்கு உன்னிடம் காதலா
காதலே உன் எளிமை தானா
வியத்தகு அம்சங்கள் உன்னிடம்
வியந்து நோக்குவோம் நாம் அன்று
போரினில் நீ மாவீரன்
அரசியலில் நீ சாதனையாளன்
சுதந்திரப் பறவைகள் எனும் அமைப்பு
பெண்விடுதலைக்கான உன் சான்று
வழியில் எமைக் கண்டாலும்
வாகனத்தால் நீ இறங்கி
புன்னகையுடன் அருகில் வந்து
நலம் விசாரித்து செல்வாயே
பிரமித்து போவோம் உன்செயலால்
பல்கலைகழகம் சென்றாய் என
பார்த்து சொல்ல முடியாது
பண்பான நடத்தை உந்தனது
பார்த்தீபனே உன் நினைவால்



உருகுது உள்ளம் அறிவாயா
பாரத அரசின் கபடத்தை
பாருக்கு சொன்னவன் நீயன்றோ
கோட்டை வாசலில் உன் முழக்கம்
காதினில் ஒலிக்குது இன்றளவும்
உண்ணா நோன்பை நீ ஏற்று
பன்னிரு நாட்கள் நீபட்ட வேதனையை
பகிர்ந்திடும் திறன் எனக்கில்லை
பல்லாயிரம் மக்கள் பார்த்திருக்க
தியாக தீயினில் எரிந்தவனே
உயிர் பிரிந்த பின்பும்
உன் உடலையளித்தாய் படிப்பதற்கு
உன்தியாகம் வீண் போகாது
நட்சத்திமாய் நீ இருந்து
வானில் பிரகாசிப்பவனே
காண்பாய் உன் கனவாகும்
நாளை காத்திருப்பாய்

– பவானி

# என் பாசறை நினைவுகள்

என் பாசறை நினைவாக
உருகி வழியும் வெண்பனி துளியாக
சலசலத்து பாய்ந்து வரும் அருவி
வெண்மை பிரவாகிக்க
பட்டுத்தெறிக்கும் அழகு
என் கடந்த காலத்தை
நினைவூட்டிச் செல்கிறது-

இயற்கை அரண்சூழ்ந்த காட்டில்
அருவிக்கரையினில்
எம் பாசறை
தோழியர் நாம் பயிற்சிகள் முடித்து
சிற்றோடை நடுவே சிரித்து
பேசுவோம்.

தாய் மண்ணுக்காய்
வாழ்ந்திட்ட எமக்கு
குளிர்விக்கும் தென்றலாய்
கொட்டும் அருவி அவள் மடியில்
இறங்கிடும் போதெல்லாம்
வெண்ணிறமானவள்
செந்நிறமாய் மாறுவாள்
எம் பயிற்சி பாசறை
செம்மண் புழுதியினால்

கொட்டும் அருவியின் நடுவில்
ஆங்காங்கே அமர்ந்து
இருக்கும் கற் சிம்மாசனங்கள்
நிர்மலமான வானில்
தவழ்ந்து விளையாடும்
வெண்முகில் கூட்டம்
இரவில் ஆயிரமாயிரம்
நட்சத்திர பூக்களின் நடுவே
தனித்தே தெரியும் வெள்ளிநிலவு
நினைக்கும் போதே
மனதில் நிழலாக
தோன்றி மறையும் தோழியர் இன்று
நினைவாகி போன கனவுகளுடன்
அன்றையநினைவுப் பொக்கிசத்தின்
மகிழ்வான சிலதருணங்களை
மீட்டிட உதவிய
எழுநிலத்திற்கு
நன்றிகள்

-பவானி

# ஈழத்துக் கவிஞர்களின் நவீன கவிதைகளில் போரும் போரியல் வாழ்வும்

- அந்துவன் கீரன் -

"நண்ப...
பொறுத்துக்கொள்
என்வரையில்
பொறுப்பெடுத்து விட்டேன்!
காவலரணில்
கடமையில் இருக்கும் போது,
எதிரியின் பாசறையை
முற்றுகையிடும் போது
அடுத்த பாய்ச்சலுக்காய்
துப்பாக்கியை துடைக்கும்
போது
ஒவ்வொருரவையாக
எண்ணி எண்ணி
எண்ணியெண்ணி நிரப்பும் போது,
உன்னுடன் பேசுகிறேன் டாம்போ
மீட்கப்படப் போவது
வெறும்
சிலாபத்துறை மட்டுமல்ல!
என்பதை மட்டும்
இப்போது தெரியப்படுத்துகிறேன்"

மலரவனின் போருலா, தூயவனின் சமரும் மருத்துவமும் முதலான புனைகதைகள் எவ்வாறு மனித வாழ்வியலைக் களமுனையுடன் இணைத்ததோ அவ்வாறே கப்டன் வானதியின் 'மன்னார் மீழும்! உன் கனவுகள் வாழும்!' என்னும் இக் கவிதை மன்னார் சிலாவத்துறை இராணுவமுகாம் மீது நிகழ்த்தப்பட்ட நேரடித் தாக்குதல்களைக் களமுனைக் காட்சிகளின் அநுபவங்களூக் கூடாக உயிரோட்டமாகப் பதிவு செய்கிறது. கப்டன் வானதியின் "நாளைய சந்ததிக்கு நடந்ததைக் கூறு" என்னும் பிறிதொரு கவிதை தமிழீழ தேசத்தின் வீர விடியலுக்காய் தம் சுகம் மறந்து காட்டிலும் மழையிலும் நின்று போராடிய போராளிகளின் உன்னத தியாகத்தை எடுத்துகிறது.


"மாளிகையில்
வாழ்ந்ததை விட
உன் ஒற்றைமர நிழலில்
காவல் இருந்ததை,
சந்தோசமாக
நினைந்ததை
பஞ்சணையில்
படுத்ததை விட

பசும் புல்லில்
சுகமாகத் தூங்கியதை,
மழையில் நனைந்து
அடுத்த ஆடைமாற்றாது
'பொஸிசனில்'
நின்றதை,
பசி மறந்து
தூக்கம் மறந்து
எதிரி எல்லையை
மீறுவதாயின்
எம் உடம்புகளின்
மேலாகத்தான்
என்ற உறுதியோடு
காவலிருந்ததை,
கூறுவாயா"

தேச விடுதலையில் தன்னுயிர் நீத்த, பங்கெடுத்த போராளிகளின் போரியல் வாழ்வையும் அவர்சார் இறந்தகால இருப்பையும் நிகழ்கால தேசத்துக்கு உணர்த்து முகமாக எழுதப்பட்ட இக் கவிதைகள் தேசத்தின் மகுடத்துக்காய் போராளிகள் பட்ட மனித அவலங்களை எடுத்துரைக்கிறது. ஈழத்தில் ஆயுதப் போராட்டம் வலுப்பெற்ற காலப்பகுதியில் தாயக மக்களின் விடுதலைக்காய் அகிம்சா வழியில் போராடி உயிர்க்கொடை தந்து நீத்தவர்களுள் திலீபன், அன்னை பூபதி முதலானோர் முக்கியமானவர்கள். போராட்ட காலத்தில் மண்ணின் விடுதலைக்காக மரணித்த இவர்களின் தியாகங்கள் அளப்பரியன. லெப்.கேணல் திலீபனை "குழிவிழுந்த கன்னங் கண்டு இங்கு குளமாகும் கண்கள் .. உங்கள் ஒட்டிய வயிறும் குழிவிழுந்த கண்களும் குற்றுயிராய்க் கிடக்கும் நிலையும் கண்டால் கல் நெஞ்சம் கசிந்து கண்ணீர் விடும்"

என்று நெஞ்சுருகும் வண்ணம் பாடிய கஸ்தூரி அன்னை பூபதியின் உயிர்க் கொடையை உணர்வுபூர்வமாகப் பதிவு செய்தவர். அன்னை பூபதியோ குடும்பம் என்னும் சிறு வட்டத்துக்குள் தன்னைச் சிறைப்படுத்தாது 'தேசம்', 'மக்கள்' என்னும் அகன்ற பரப்பினில் தன்னை உட்படுத்தி தாயக விடுதலைக்காய் உரிமைக்குரல் கொடுத்தவர். அன்னையின் பணி, தியாகம் முதலான இன்ன பிற செயல்கள் கஸ்தூரியின் "காலம் அவளது கைபிடித்து நகர்கிறது" என்னும் கவிதை உள்ளம் நெகிழும் வண்ணம் பதிவு செய்யப்படுகிறது.

"தாயே.....!
பிரபஞ்ச வரலாற்றின்
பிரமாண்டமான உச்சியில்
உயிரோட்டத்தோடு
உன்னை நீ
செத்துச் செத்துச்
செதுக்கிக்கொண்டாய் .....
'உறுதிப்படுத்தப் படாத
உலக அழிவு
ஒருநாள்
உண்மையாகிப் போனாலும்
அதற்குப் பின் வரும்
யாருமே அறியாத
ஆரம்பமொன்றிலும்
உந்தன் பெயர்
உயிர்த்திருக்கும்"




மக்களுக்கென வாழ்ந்தவர்கள் மரணிப்பதில்லை. அவர்கள் என்றும் எப்போதும் ஜீவித்துக் கொண்டு இருப்பவர்கள் என்னும் உண்மையை அதன் திண்மையை இக்கவிதை வெளிப்படுத்தி நிற்கிறது. போர் தின்ற பூமியைக் "காதோடு சொல்லுகின்றோம்" என்னும் கவிதைத் தொகுப்புக்கூடாக உயிரோட்டமாகப் பதிவு செய்தவர் மேஜர் பாரதி ஆவார்.

யுத்தம் மலிந்த பூமியில் அவல வாழ்வியலுக்குட்பட்ட மக்களைப் போராளிகளுடன் இணைத்த இத்தொகுப்பு காத்திரமான கவிதைகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. 'போராடச் சென்ற பெண் போராளி தன் தாயினை நினைத்து ஏங்குகின்றாள். தன் மகவை நேசித்த உள்ளார்ந்த அன்பு போராளிக் கவிஞையின் உள்ளத்தை வருடிச்செல்கிறது'.

தாயின் நேசிப்பும், மகவின் ஏக்கமும், தேசம் மீது கொண்ட அதீத அன்பும் பாரதியின் 'அன்பான அம்மா' கவிதையில் வெளிப்படுத்துகிறது.

“நாளை திரும்பி வரா
உன் மகளை எண்ணி
நீ கவலைப்படாதே
என் மறைவின்
பின்னர்
புதிய தோழர்கள்
அந்த வைகறைக்காய்
புறப்படுவார்கள்.
அதற்கு முன்னால் அவர்கள்
உன்னிடம் வரலாம்.
அப்போது அவர்களின்
புதிய சீருடையில்
புதிய துப்பாக்கியில்
இனிய முகங்களில்
என்னைப் பார்.
அடுத்து வரும் நாட்களில்
அவர்களும்
இல்லாமல் போகலாம்
ஆனால்...
என்றோ ஒரு நாள்
எம் மக்கள்
புறப்படுவார்கள்
அப்போது அந்த
புதிய விடியலை
வரவேற்கும்
அதிகாலைப்
புஸ்பங்களாய்
மெல்லிய பனித்துளியின்
முகத்தின் பின்னால்
நாம் முகையவிழ்ந்து
தென்றலின் தடவலில்
முகமலர்ந்தாடுவோம்.
அப்போது நீ இருந்தால்
உற்றுப்பார்.
உன் செல்ல மகளின் முகம்
சிரித்தபடியே தெரியும்.”

இதனைப் போன்றே தாயைப் பிரிந்து போன மகவின் ஏக்கத்தை கௌதமியின் “அன்னை நிலம்” என்ற கவிதையும் உள்ளம் நெகிழும் வண்ணம் எடுத்துரைக்கிறது.

“ அம்மா!
அழுகின்றாயே வேண்டாம்
நான் மீளவில்லையெனில்
என் படத்துக்கு ஒரு
முத்தம் கொடுப்பாயல்லவா....
ஏனெனில் என்றுமே... நான்
உனக்கும் குழந்தைதான்!”

கவிதை மொழியின் வழியே அதிக சாத்தியங்களை உருவாக்கும் என்பதற்கு இக்கவிதை சிறந்த எடுத்துக்காட்டாகும். கவிதைக்குள் பொதிந்திருக்கும் உண்மை, உணர்வின் ஆற்றல் இக்கவிதையை வீரியமாக்குவதுடன் நுகரும் சாதாரண வாசகனின் உணர்வின் முள்கொண்டு கீறுகிறது. 1987 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசினால் யாழ்குடா நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையைத் தொடர்ந்து 1987ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி ‘ஒப்பரேசன் லிபரேசன்’ என்னும் பெயரில் இலங்கை இராணுவத்தால் வடமராட்சிப்பகுதிகள் கைபற்றப்பட்டன. இதனை அடுத்து வடபகுதியில் பொருளாதாரத்தடையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்குகின்றோம் என்னும் அடிப்படையில், இந்தியப்படையினர் இலங்கையின் எல்லைக்குள் அத்து மீறி நுழைந்து ஐந்து யுத்தவிமானங்கள் மூலம் சுமார் 24 தொன் பொருட்களைப் பாராசூட் மூலம் போட்டனர். ‘ஒப்பரேசன் பூமாலை’ என்னும் இந்நடவடிக்கையைத் தொடர்ந்து 1987 ஆடிமாதம் 29 இல் நிகழ்ந்த இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின் பயனாக இந்திய அமைதிப்படை இலங்கைக்குள் நுழைந்தது.

1987 ஆவணி மாதத்துக்குப் பின் இந்திய இராணுவத்துக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட விரிசல்களைத் தொடர்ந்து இருதரப்பினருக்கும்

இடையில் பாரிய மோதல்கள் வெடித்தன. இவ்விரு தரப்பினருக்கும் இடையில் நடைபெற்ற யுத்தத்தில் புலிகள் என்னும் பெயரில் ஏராளமான அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டதுடன் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு காணாமல் போயினர். பெண்கள் புலிகள் எனப் பெயர் சூட்டப்பட்டு பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுச் சிதைக்கப் பட்டனர். தமிழ் இளைஞர்கள், யுவதிகளுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்கொடுமைகளை ஈழத்துப் பெண் கவிதைகள் பதிவு செய்துள்ளன.

"உலகநாடுகள் முன்

தமிழன் வயிற்றுப் பசியை

வாதாட்டத்திற்கு வைத்தது

வல்லரசு.

அனைத்து நாடுகளும்

அண்ணாந்து பார்த்து நிற்க

உயரத்திலிருந்து விழுந்தன

உணவுப் பொட்டலங்கள்.

ஒருதலைப் பட்சமாக

உள்ளே வந்த வல்லரசால்

அரிசிப் பொதிகள் விழுந்த

அதே குச்சொழுங்கையில்

குப்பெனப் பீறிட்டது

குருதியாறு"

ஒரு காலகட்ட வாழ்வியலின் நிசத்தைப் படம் பிடித்துக் காட்டும் கஸ்தூரியின் இக்கவிதை,இந்திய அரசின் உண்மையான முகத்தை வெளியுலகுக்குக் காட்டி நிற்கிறது.

"அமைதி காக்க வந்தவர்கள்

என் வாழ்வின் அமைதியைக் கெடுத்தனரே

புகுந்தனரே என் வீட்டினுள்

பதறியது என் தேகம்

பாய்ந்தனர் என்மீது

பதம் பார்த்தனர் என் உடலை

குரங்கின் கையில் அகப்பட்ட

மாலையாய் ஆனதோ என் உடல்

உடல் முழுக்க நோ

உள்ளத்திலோ பாரம் -ஆனாலும்

என் இருப்பு உறுதியானது".

இந்திய அமைதிப்படையினரால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்ணின் உள்ளத்தையும் அவளது இருப்பையும் முன்மொழியும் இக்கவிதை, துன்பியல் வாழ்வுக்குள் அகப்பட்ட போதும் துவளாது போராடும் தமிழ் பெண்களின் மனோதிடத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

போர் மக்களின் வாழ்வாதாரங்களைச் சிதைத்ததோடு, வாழ்விடங்களையும் பறித்தது. பிறந்தகம் பற்றிய ஏக்கங்களையும் இடம் பெயர்வுற்றவர்களின் துன்பங்களையும் இக்காலத்தில் எழுந்த கவிதைகள் காலத்துயராய் பதிவு செய்தன. குடியிருப்பு மனைகள் தகர்க்கப்பட்டு மக்களில்லா பாலைகளாய் வெறுமை படரக் கிராமங்கள் இருந்த நிலையினை யாழினியின் கவிதை உணர்வுத்தளத்தில் பதிவு செய்கின்றன.

"மாங்காய்க் கெறிந்து மண்ணில் விளையாடி

பாங்காய்த் திரிந்த ஊர் பாழ்பட்டுக்

கிடக்குதையோ வரம்பில் நடந்து அழகை ரசித்து

பரம்பரை வயல்கள் சீரழிந்து

கிடக்குதையோ தேங்காய்க் குரும்பை தொங்கிப்

பறித்து நாங்கள் குடித்த தென்னை

தலையிழந்து நிற்குதையோ பால் தயிர் தந்த

எங்களின் பசுக்கள் கால் குளம்பிழந்து

கிடக்குதையோ"

சு.வில்வரெத்தினத்தின் காலத்துயர், காற்றுவழிக்கிராமம் என்பவற்றின் தொடர்ச்சியாய் இக் கவிதை சின்னாபின்னமாய்ச் சிதறுண்டு வாழ்விடத்தை உணர்வுபூர்வமாய்க் காட்சிப்படுத்தப்படுகிறது. தமிழீழப் போராட்டத்தில் தமிழ் மக்களுக்குரிய நியாயப்பாடான பக்கங்கள் பல உண்டெனினும் தவறான கற்பிதங்களுக்குள்ளான தேசியவாதத்தின் மோசமான பக்கங்கள் பல, விமர்சிக்கப்பட்டதும் உண்டு.

அடுத்த இதழில் தொடரும்..

# சூரியக் குழந்தை

மானுட இதயம்
மறுபடி ஒருதரம்
துளையிடப்பட்டதால்
துடிப்புடன் எழுந்தது.

அன்றொரு நாள்
எண்பத்தியேழில்
எங்கள் மண்ணில்
அமைதி என்பது
வழமை போலவே
முழு நிர்வாணமாய்
மேடையேறியது.

அமைதி முகமூடி
அறிந்திடா மனிதர்
திரை விலகுதற்காய்
நிரை நிரையாக
திரண்டிருந்தனர்.

கணப் பொழுதுதான்.
திரை விலகிட
ஆவல் பொங்கிய
அப்பாவி முகங்கள்
குருதி வழிந்து
கோறையாய்ப் போயின.

மானுட இதயம்
மறுபடி ஒருதரம்
துளையிடப்பட்டதால்
துடிப்புடன் எழுந்தது.

எங்கள் மண்ணில்
சுதந்திர தீபம்
சுடர் விட்டெழும்ப
உயிர் எண்ணெய்
உருகி வழிந்தது.

வழிந்ததில் ஒருதுளி
ஏந்திய இனங்கள்
இலட்சிய நெருப்பை
இதயத்தில் ஏந்தின.

திலீபன் என்ன
தமிழினத்தின் தனிமகனா?
இல்லவே இல்லை.
உலகத்தின் தோள்களில்
உலாவரும் சூரியக் குழந்தை.

கிழக்கு எமக்கு
கெதியாய்ச் சிவப்பதற்காய்
இவன் குருதி
அடிவானை நோக்கி
ஆவியாய் போனது.

அடிமை இருளின்
அடர்த்தி குறைந்தது
இவன் உடலிலிருந்து
விடை பெற்ற மூச்சில்
அன்றாடம் அன்றாடம்
அது கரைந்து கொள்வதால்.

காற்றிடை வெளியிலெம்
கண் முன்னாலொரு
கடத்தல் நிகழ்ந்தது.
ஒளி எனும்
பெரு வெளிச்சம்
இவன் கண்ணிலிருந்து
எம் மண்ணுக்குப்
பாய்ந்தது.

மானுட இதயம்
மறுபடி ஒருமுறை
துளையிடப்பட்டதால்
துடிப்புடன் எழுந்தது.

மனித இதயங்களே,
கவனப் படுத்துங்கள்
இவன் காலடிச் சுவடுகளை.
ஏனென்றால்
அன்றைய அவனது
பாதப் பதிவுகள்தான்
புதிய பூமியின்
நீள் வட்டப் பாதை.
தன்னைத்தானே
சுழற்றும் பூமியின்
சுழற்சி அச்சும்
இவனேதான்.

கால நெருப்புக்குள் இவன்
கருகுண்டு போவானா?
எப்படி முடியும்?
கால நெருப்பு
இவன்
கைகளுக்குள்ளேதானே
கட்டுப்பட்டிருக்கிறது.

நாளைய உலகின்
விடியற் பொழுதில்
எல்லாமும் இவனாய்
ஆகிப் போகின்ற
நிகழ்வினை இன்று
சூல் கொள்ள வைத்தமைக்காய்
பூமியில் பாரதம்
பொருமியபடியே
குனிந்து நிமிரட்டும்.

( மேஜர் பாரதியின் காதோடு சொல்லிவிடு கவிதைத் தொகுப்பிலிருந்து )

# வரலாற்றில் ஒரு நாள்

அமைதிப் படையாக உள்ளே நுழைந்து, ஆக்கிரமிப்பாளர்களாக தம்மை இனம் காட்டிக்கொண்ட இந்திய இராணுவத்துடனான சண்டைக் காலம் அது. அமைதிப் படையிடம் இருந்து மண்ணையும் மக்களையும் காக்க போராளிகள் உக்கிரமாகச் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த வேண்டிய தேவை எழுந்தது. சண்டைகள் ‘கெரில்லாப் போர் முறை’க்கு மாற்றமடைய, தேசியத் தலைவருடன் குறிக்கப்பட்டளவு போராளிகள் மணலாறு காட்டினுள் தளம் அமைத்தனர்.

காட்டினுள் நுழையும் இராணுவத்தினர் சரமாரியாக அடி வாங்கிக் கொண்டிருந்தனர். காடு தொடர் முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. காட்டினுள் இருந்த போராளிகளுக்கான உணவு, இராணுவத் தளபாட விநியோகத்தை தாம் நிறுத்தி விட்டதான இராணுவத்தினரின் பெருமிதத்திற்கு ஆப்பு வைத்தார்கள் போராளிகள். முற்றுகையை ஊடறுத்து, தேவையானவற்றை காட்டினுள் கொண்டு வந்து விடுவார்கள். சிரமமான வாழ்க்கைதான். ஆனாலும், புதிது புதிதான இராணுவ யுக்திகளையும், தப்பி உயிர் வாழ்தலையும் (survival) கற்றுத் தருவதற்குத்தான் தலைவர் இருக்கிறாரே. பயிற்சிகளுக்கும் கற்றலுக்கும் சந்தோசத்துக்கும் எந்தக் குறையுமே இருந்ததில்லை.

தலைவரின் சிந்தனை எப்போதும் தாயகம் நோக்கியதாகவே இருக்கும். ஒருநாள் தன்னுடைய தளத்திலிருந்த போராளிகளை தலைவர் ஒன்று கூட்டினார்.

“எமது மண்ணில் எதிரி சர்வ சாதாரணமாக நடமாடுகின்றான். அவன் அடுத்த அடி எடுத்து வைக்க பயப்பட வேண்டும். நாளை ஒரு போட்டி. நீங்கள் இருவர் இருவராக குழு அமைத்துக் கொள்ளுங்கள். அவன் பயப்படும் வகையில் ஒரு கண்ணிவெடியைக் கண்டு பிடியுங்கள். அதற்குத் தேவையான பொருட்களை இப்போதே பெற்றுக் கொள்ளுங்கள்.” என்றார்.

‘பிள்ளைகளும் பெடியளும்’ தனித்தனியே குழுக்கள் அமைத்தார்கள். இரவு யாருக்கும் சரியான உறக்கமில்லை. விடிந்தது. சிலர் ‘booby trap’ வடிவில் பொறிமுறை அமைத்தார்கள். சிலர் கயிற்றில் தடக்கும் போது வெடிக்கும் பொறி



செய்தனர். இரு போத்தல்கள் அடிபட்டு உடையும் போது வெடிப்பது போல் இன்னொன்று இருந்தது. இப்படி பல வகையான கண்டுபிடிப்புக்கள் வெளிவந்தன. போட்டியின் முடிவில், சிறந்ததாக தேர்வு செய்யப்பட்டவைக்கு பரிசுகள் கிடைத்தன. ஆனாலும், எந்தப் பொறிமுறையுமே துல்லியமானதாகக் கருக்கொள்ளவில்லை.

அன்றிரவு.. படுத்திருந்த தலைவர் துள்ளி எழும்பினார்.

“ ராயு. ஒரு பேப்பர் தாங்கோ” என்றார்.

ராயு ஒரு பேனாவும் சேர்த்துக் கொடுக்க, அப்படியும் இப்படியுமாக சில கோடுகள் வரைந்தார்.

“இது எப்படி இருக்கு?” என்றார். அதன் பொறிமுறையை விளக்கினார். எல்லோரும் பிரமித்துப் போயினர்.

அதுதான் ‘ஜொனி மிதிவெடி’. இதனுடைய தாக்கம் எப்படியிருக்கும் என்பதை இங்கிருந்த இந்திய இராணுவத்தினரிடம் கேட்டுப் பாருங்கள். ஜொனி என்றாலே கதி கலங்கிப் போய்விடுவார்கள்.


“ எப்படி அண்ணா?” என்று கேட்டபோது, தேசியத் தலைவர் சொன்னது இதுதான்..

‘இலக்கு மட்டுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்கும் போது அதை அடைவதற்கான வழிகளை நீங்களே உருவாக்குவீர்கள்.’

# ஆப்கானியப் பெண்களின் நிலை என்ன?







ஆப்கானிஸ்தான் முழுவதும் தலிபான்கள் வசம் வீழ்ந்ததன் பின்னர், முழு உலகமும் அங்குள்ள மக்களின் நிலை பற்றி - குறிப்பாக பெண்கள், குழந்தைகளின் நிலை பற்றி கடுமையான அச்சம் தெரிவித்து வருகின்றனர். வல்லரசு நாடுகளும் வளர்முக நாடுகளும் கூட்டாகவும் தனித்தனியாகவும் தங்களுடைய விசனத்தைத் தெரிவித்தாலும் இவையெல்லாம் எவ்வளவு தூரம் அங்குள்ள பெண்களின் வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கப் போகின்றன என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## யார் இந்தத் தலிபான்கள்?

பாஷ்ரோ மொழியில் 'தலிபான்கள்' என்றால் 'மாணவர்கள்' என்று அர்த்தம். அமெரிக்க - சோவியத் பனிப்போர் காலத்தில், ஆப்கானில் சோவியத் ஆதரவு இடதுசாரிக் கட்சி ஆட்சியைப் பிடிக்க, அவர்களுக்கு ஆதரவாக சோவியத் படைகள் ஆப்கானுக்குள் களமிறங்கின. பதிலுக்கு, எதிரான உணர்வுள்ள ஆப்கானியர்களை 'முஜாகுதீன்கள்' என்ற பெயரில் திரட்டி பயிற்சியளித்து ஆப்கானுக்குள் இறக்கியது அமெரிக்கா. ஜிகாத் - புனிதப்போர் - பயங்கரவாதம் என்ற பதங்கள் எல்லாம் அப்போதுதான் உலகில் உக்கிரமாகக் கேட்கத் தொடங்கின.

1994 இல், பாக்கிஸ்தானில் படித்துக் கொண்டிருந்த ஆப்கான் மாணவர்களை ஒன்று திரட்டி, முல்லா அலி ஓமர் என்பவர் 'தலிபான்' என்ற அமைப்பை உருவாக்கி களமிறக்கினார். ஆப்கானில் 10 வருடகால யுத்தத்தின் பின், பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பறிகொடுத்து, 1998ல் சோவியத் படைகள் நாடு திரும்ப, ஆப்கானில் ஆட்சி கவிழ்ந்து தலிபான்கள் காபுலைக் கைப்பற்றினர்.

அவர்களின் ஆட்சிக் காலத்தில் இஸ்லாமிய ஷரியா சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஷரியா என்பது அனைத்து முஸ்லிம்களும் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு வாழ்க்கை நெறி என்று சொல்லப்பட்டாலும், நாட்டுக்கு நாடு அதன் நடைமுறைத் தன்மை வேறுபடுகின்றது. கடந்த காலங்களில் தலிபான்கள் ஷரியா சட்டத்தின் மூலம் பெண்களையும் சிறுவர்களையும் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாக்கியிருந்தனர்.



1. பெண்கள் முகத்திலிருந்து பாதம் வரை வெளியில் தெரியாதவாறு மூடியே உடை அணிய வேண்டும்.
2. பெண்களுக்கான கல்வி, மருத்துவம், வேலைகள் மறுக்கப்பட்டன. ‘அபின்’ என்ற போதை வஸ்து விளைவிக்கப்படும் தோட்டங்களில் வேலை செய்வதற்கு மட்டும் அனுமதியிருந்தது.
3. எந்தப் பெண்ணுமே குடும்பத்திலுள்ள ஆணின் துணையில்லாமல் வீதியில் இறங்க முடியாது.
4. தொலைக்காட்சிகள், திரைப்படங்கள் அனைத்தும் தடை செய்யப்பட்டு இருந்தன.
5. உரிமைகளுக்காக - குறிப்பாக பெண்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பது மறுக்கப்பட்டிருந்தது.
6. குற்றவாளிகள் என அடையாளம் காணப் படுபவர்களுக்கு பொது வெளியில் கடுமையான தண்டனைகள் வழங்கப் பட்டன.

இவையெல்லாம் பெண்கள்மீது திணிக்கப்பட்டிருந்த சட்ட வடிவிலான அடக்குமுறைகளின் ஒரு பகுதிதான். அவர்கள் அனுபவித்த துன்ப துயரங்களுக்கு அளவுகோல் ஏது? அப்போது 15 வயதுச் சிறுமியாக இருந்தவரும், சிறுமியரின் கல்விக்காக குரல் கொடுத்தவருமான மலாலாவிற்கு நிகழ்ந்த கொடுமையையும், பின்னாளில் அவர் தனது போராட்டத்திற்காக நோபல் பரிசு பெற்றதையும் எவரும் மறந்துவிட முடியாது. அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின் அமெரிக்கப் படைகள் ஆப்கானுக்குள் தரையிறங்க, அப்போது தலிபான்களின் ஆட்சி முடிவிற்கு வந்தது. ஆட்சிக்கு வந்தது தலிபான் எதிர்ப்புக் குழுவான வடக்குக் கூட்டணி. இந்தக் காலத்தில் பெண்களுக்கு சம உரிமை இல்லாது போனாலும் அவர்களின் உரிமைகள் மறுக்கப்படவில்லை. ஆரம்பத்தில் 10 சதவீதத்திற்கும் குறைவான தொகையிலான பெண்களே ஆரம்பக் கல்வி கற்க அனுமதிக்கப்பட்டு இருந்தாலும், அது இப்போது 33 சதவீதத்தையும் தாண்டி நிற்கிறது. பல்லாயிரக்கணக்கான பெண்கள் ஆப்கான் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்கின்றனர். முன்பு மருத்துவர்களுக்குக் கூட வேலை மறுக்கப்பட்டிருந்த நிலையில் இன்று அனைத்துத் தரப்பினரும் வேலைக்குச் செல்கின்றனர்.

இப்போது 20 வருடங்களின் பின் மீண்டும் தலிபான்களின் ஆட்சி. ஆட்சியமைப்பதற்கு முன்னான தலிபான்களின் செய்தி மாநாட்டின் முக்கிய தருணங்களைப் பாருங்கள். தலிபான்கள் ஷரியா அல்லது இஸ்லாமிய சட்டப்படி ஆப்கானிஸ்தானை ஆட்சி செய்வார்கள் என்று கூறுகிறார்கள். அமெரிக்கா மற்றும் நேச நாட்டுப் படைகளின் வெளியேற்றத்திற்கான பேச்சுவார்த்தையின் பின் தலிபான் ஆப்கானிஸ்தானின் முழுக் கட்டுப்பாட்டையும் எடுத்துள்ளது.




ஆட்சிக்கு வந்தபிறகு நடந்த முதல் செய்தியாளர் சந்திப்பில், தலிபான் செய்தித் தொடர்பாளர் ஊடகங்கள் மற்றும் பெண்களின் உரிமைகள் போன்ற பிரச்சனைகள் "இஸ்லாமிய சட்டத்தின் கட்டமைப்பிற்குள்" மதிக்கப்படும் என்று கூறினார், ஆனால் அது நடைமுறையில் என்ன அர்த்தம் என்று அவர்கள் இன்னும் எந்த விவரத்தையும் அளிக்கவில்லை.

தலிபான்கள் ஷரியாவின் கடுமையான விளக்கத்திற்கு பெயர் பெற்றவர்கள் என்பது உலகறிந்த உண்மை - தண்டனை பெற்ற கொலைகாரர்கள் மற்றும் விபச்சாரிகளிற்கு கொடுக்கப்பட்ட பொது மரணதண்டனை போன்றவை உட்பட.

ஆப்கான் மக்களும் அதீத பயத்துடனும் அவநம்பிக்கையுடனுமே இருக்கின்றார்கள். விமானத்தின் சக்கரங்களில் தொங்கி பயணம் செய்ய முற்பட்டு நடு வானிலிருந்து வீழ்ந்து இறந்த சம்பவமும், தப்பிக்கும் எத்தனிப்பில் தள்ளுமுள்ளில் இறந்த மக்கள் கூட்டமும், பல்லாயிரக்கணக்கான மக்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதும் செய்திகளாக வெளிவந்தவண்ணம் உள்ளன. பெண்களின் உருவப்படங்கள் உள்ள சுவர்கள் வெள்ளையடிக்கப்படுவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்களை வீடு வீடாகத் தேடும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் உறுதியற்ற செய்திகள் உலவுகின்றன. என்னதான் நடக்கப் போகிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.

**- கார்த்திகை**

# வன்னி விழிப்புலனற்றோர் சங்கம்

**வன்னி விழிப்புலனற்றோர் சங்கம் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களின் பேராதரவை வேண்டி நிற்கின்றது.**

வன்னி பார்வையற்றோருக்கான சங்கம், இலங்கையின் வடக்கு கிழக்கில் பல ஆண்டுகளில் நடந்த பாரிய போரின் விளைவாக கண்பார்வை இழந்த மக்களை ஒன்றிணைக்கும் ஒரு அமைப்பாகும்.

இந்த சங்கம் இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் அதன் தலைமையகம் கிளிநொச்சியில் இருந்து பார்வையாளர் மாற்றுத்திறனாளிகளுடன் உருவாக்கப்பட்டது. சிலர் கண்களோடு சேர்ந்து கைகால்களையும் இழந்துள்ளனர். இது ஒரு பதிவு செய்யப்பட்ட அரசு சாரா அமைப்பு.

பதிவுஎண்:NP/KN/KV/DS/VSSO/2016/23.

இதன் 278 உறுப்பினர்கள், அவர்கள் அனைவரும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

வன்னி பார்வையற்றோருக்காக சங்கம் 22.07.2013 அன்று அரசு சாரா அமைப்பாக பதிவு செய்யப்பட்டது. பாரிய யுத்தம் 2009இல் முடிவடைந்தது. எங்கள் உறுப்பினர்கள் சிலர் நேரடியாக போரினால் பாதிக்கப்பட்டு நல்வாழ்வுக்கான விலையாக அவர்களின் கண்களை செலுத்தினர். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 278 பயனாளிகள் எங்கள் சங்கத்தின் ஒரு பகுதியாக உள்ளனர். எங்கள் சங்கம் சட்டப்படி நான்கு கவுன்சில்களால் நிர்வகிக்கப்படுகிறது. சங்கம் தொண்டு அடிப்படையில் ஒன்பது பார்வை குறைபாடுள்ள உறுப்பினர்களைக் கொண்ட இயக்குநர்கள் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. ஒழுங்கு நடவடிக்கைகளுக்கான முடிவுகள் இயக்குநர்கள் குழுவால் கூட்டாக நிறைவேற்றப்படுகின்றன. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நிகழும் கூட்டத்தில் பயனாளிகளின் பிரச்சனைகளை விசாரித்து நியாயமான தீர்வை வழங்குவது மூன்று உறுப்பினர் கவுன்சிலின் கடமையாகும்.

ஆண்டுக்கு ஒரு முறை கூடி கணக்கு அறிக்கை மற்றும் முன்னேற்ற அறிகுறியை ஆராய்ந்து ஏற்றுக்கொள்வது, பிரச்சினைகளைத் தீர்ப்பது மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இயக்குநர்கள் குழுவின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது பொதுச் சபையின் கடமையாகும். ஆரம்ப கட்டங்களில் நன்கொடையாளர்களின் உதவியுடன் நிவாரணம் மற்றும் வாழ்வாதார உதவிகளைத் தொடங்குவதோடு, கண் பராமரிப்பு, கண்ணாடி, பாகங்கள் வழங்குதல், அடிப்படை தேவைகளான கிணறுகள், கழிவறைகள், போக்குவரத்து உதவி, பயிற்சி வகுப்புகள் போன்றவற்றிற்கான உதவிகளை மேம்படுத்துதல் மற்றும் பார்வையாளர், மற்றும் பிற ஊனமுற்ற குழந்தைகளுக்கு மாதாந்திர உதவி வழங்குதல், கல்வி மேம்பாடு, பார்வை குறைபாடுள்ள குடும்பங்களில் படிக்கும் குழந்தைகளிற்கான வளர்ச்சி என்பன எங்கள் முன்னுரிமையான வேலைத்திட்டங்களாகும்.

எங்கள் சங்கம் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டும். முதலில், சாதாரண மனித செயல்பாட்டில் இருந்து வேறுபட்ட ஒரு சிறப்புத் திறன் எங்களிடம் உள்ளது, மேலும் கல்வியில் எதிர்கொள்ளும்

**வன்னி விழிப்புலனற்றோர் சங்கம்**
வடக்கு கிழக்கு மாகாணச் செயலகம்
**VANNI ASSOCIATION FOR VISUALLY HANDICAPPED**
NORTH EASTERN PROVINCIAL OFFICE



சவால்களின் அடிப்படையில், பார்வையாளர்களுக்கு கற்றல் திட்டங்கள், கணனிப் பயிற்சி, சிறப்புத் தேவைகள் ஆசிரியர்கள் மற்றும் சிக்கல்களை எதிர்கொள்ளும் பொருட்கள் இல்லை. வேலைவாய்ப்புத்துறையில் வயது மற்றும் இயலாமை பயன்பாட்டின் அடிப்படையில் நாங்கள் புறக்கணிக்கப்படுகிறோம்.

மருத்துவ சவால்களைப் பயன்படுத்துவதற்கான கண் சிகிச்சை முறைகளுக்கான நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதாரங்களின் பற்றாக்குறை, வாழ்வாதார சவால்கள், குடும்ப உறுப்பினர்களின் ஒத்துழையாமை, இயலாமை, பொருத்தமற்ற வாழ்வாதாரங்கள் மூலம் சமூக நோய்கள் போன்றன வாழ்வாதாரத் திட்டங்களில் பின்னடைவை ஏற்படுத்துகின்றன. நாங்கள் திட்டங்களை முழுமையாக ஆராய்ந்து, நன்கொடை நிதியைக் கொண்டு முன்னேறும் வழிகளைக் கண்டறிந்து செயல்படுத்த முயற்சிக்கிறோம்.

ஆனாலும் அடிப்படைத் தேவைகளுக்கான சவால்களைப் பொறுத்த வரையில், கிணறுகள், கழிப்பறைகள், வீட்டுத் திருத்தங்கள் போன்றன போதுமான அளவு செயல்படுத்தப்படவில்லை. இந்தத் திட்டங்களை நிறைவேற்ற நன்கொடை அன்பர்களைக் கண்டு பிடிக்கிறோம்.

போக்குவரத்து சவால்களைப் பொறுத்தவரையில், பொதுப் போக்குவரத்து வாகனங்களில் பயணம் செய்ய இயலாமை, எல்லா இடங்களுக்கும் தனியாக தனியாக செல்ல தொழில்நுட்பம் இல்லாதது போன்ற பிரச்சினைகளை நாங்கள் எதிர்கொள்கிறோம். மற்றொரு நபரின் உதவியுடன் நாங்கள் இந்த சவால்களை சமாளிக்கிறோம்.

தகவல்தொடர்பு சவால்களின் அடிப்படையில், பார்வையாளர் தகவல் தொடர்பு சாதனங்களின் அடிப்படையில் பயன்படுத்தக்கூடிய திறன்களில் மொபைல் போன் பெறுவதில் சிக்கல்கள் உள்ளன.

கோவிட் 19 காரணமாக எங்கள் உறுப்பினர்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இன்றைய உலகில் சிகிச்சை நோய் உலகை அச்சுறுத்துகிறது, பொருட்களின் விலைகள் உயர்கின்றன.

இன்று, ஒரு கிலோ அரிசி- 130 ரூபாய், ஒரு கிலோ மீன்- 400 முதல் 1000 ரூபாய், கோழி இறைச்சி- 800 ரூபாய், வெங்காயம் -300 ரூபாய் உட்பட அனைத்து அத்தியாவசிய பொருட்களிலும் விலைகள் அதிகரித்து வருகின்றன. தினசரி கூலிக்கு வேலை செய்பவரின் உழைப்பு ஒரு நாளுக்கு ஒரு குடும்பத்தை பராமரிக்க போதுமானதாக இல்லை. இதில் பார்வையாளர் குடும்பம் மிகவும் பலவீனமாகவும் மற்றவரின் தயவை பெரிதும் நம்பியுள்ளது. இந்த கட்டத்தில், போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அனைத்து பொதுப் போக்குவரத்தும் முடக்கப்பட்டுள்ளது. எங்கள் பார்வையற்ற குடும்பங்கள் மருத்துவமனைக்குச் செல்ல சிரமப்படுகின்றனர். அவர்கள் உணவு நெருக்கடி, உலர் உணவு, மருந்துகள் மற்றும் போக்குவரத்து உதவிகளால் பாதிக்கப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு:

வன்னி பார்வையற்றோருக்கான சங்கம்,

வட கிழக்கு மாகாண செயலகம்,

விவேகானந்தர் நகர்,

கிளிநொச்சி.

(பதிவு எண் :

**Q6U - NP / KN / KV / DS / VSSO / 2016/23** )

தொலைபேசி எண் - 0094-712122780

0094-212283080

மின்னஞ்சல்- vannivissually@gmail.com

இணையதளம்:

www.vanniassociationforvisuallyhandicapped.com

பேஸ்புக் - வன்னி பார்வை குறைபாடு

தொடர்பு மக்கள்:

1. பேரம்பலம் ஞானகுமார்,
   தலைவர், 00944-773638533
2. கிரிஷ்ணன் மகிந்தகுமார்
   செயலாளர், 0094-776744651

குறிப்பு: நீங்கள் வெளிநாட்டிலிருந்து எங்களை தொடர்பு கொள்ள முயற்சித்தால் நேரத்தை நினைவில் கொள்ளுங்கள். எங்களை தொடர்பு கொள்ள சிறந்த நேரம் இலங்கை நேரம் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை.

# தொலைக்காட்சி

# தொடர் நாடகங்களும் பெண்களும்

-கலை-

சமூக வலைத்தளங்களில் தனது பெரும் பான்மையான நேரத்தைச் செலவு செய் பவர்களில் பலர் அதன் தாக்கத்துக்கு உள்ளாகி, மிகவும் பாதிப்பான மனநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இதில் குடும்பப் பெண்கள் தம் மனச்சுமையை மறக்கடிக்கும் ஒரு வடிகாலாக தொலைக்காட்சி பார்க்கத் தொடங்கி, வரும் நெடும் தொடர்களில் மூழ்கித் திளைத்துப் போகிறார்கள். இது பெரும்பாலான சமூகநலன் விரும்பிகளின், கருத்தாக உள்ளது.

ஆம்! தொலைக்காட்சி மக்களைத் தொடர்பு படுத்துவதில் முன்னணி வகிக்கிறது. இதன் வெளிப்பாடு, பல்வேறு வகையான தொலைக்காட்சி அலைவரிசைகள் வணிக ரீதியில் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன. அவ்வகையில் இவ் அலைவரிசைகளில் ஒலிபரப்பாகும் தொடர் நாடகங்கள் பெண்களால் விரும்பிப் பார்க்கப்படும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளன. இதிலேயே மூழ்கிப் பழகிப் போனவர்களுக்கு இந் நாடகங்களில் வரும் கதாபாத்திரங்களை தம் குடும்ப அங்கத்தவர் போல எண்ணும் மனநிலை உருவாகிவிட்டது.




வெவ்வேறு நேரங்களில், வெவ்வேறு தொலைக்காட்சிகளின் அலை வரிசையில் தொடர்ச்சியாக நெடும் தொடர் நாடகங்கள் ஒளிபரப்பப்படுவதால், அதற்குத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டவர்களால் அதிலிருந்து மீள முடிவதில்லை. அதற்கு அடிமையாகிப் போனவர்கள் தனது சிந்தனைத் திறனை சாதாரண வாழ்க்கைக்கு பயன்படுத்தாமல் ஏதோவொரு கற்பனையான உலகில் வாழ்வதாக பிரமை கொள்கின்றனர்.

இதனால் தம் அன்றாட பணிகளைக் கூட சரியாகப் பார்க்க முடியாமல் எதையும் அவதிப்பட்டுச் செய்துவிட்டு அவசரம் அவசரமாக தொலைக்காட்சி முன்னால் உட்கார்ந்து விடுகிறார்கள். இது குடும்ப உறவில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றது. இதனால் பெரிதும் பாதிக்கப்படுவது பிள்ளைகளே. இவர்களது எதிர்காலமும் கேள்விக்குறியாகின்றது.

பெண் விடுதலை, சம உரிமை என்று எதைப் பேசினாலும், விஞ்ஞான யுகத்தில் வாழ்ந்தாலும், எம் கலாச்சார விழுமியங்கள் மாறப் போவதில்லை. எவ்வளவு முற்போக்கான சிந்தனையுடைய பெண்ணாயினும் கல்யாணம் ஆகிவிட்டால் அவளின் பொறுப்புக்கள் அதிகரித்து விடுகின்றது. சிக்கல்கள் எழும்போது வாழ்க்கையில் ஒரு பிடிப்பினை ஏற்படுத்துவதற்காக ஒரு பொழுது போக்காக ஆரம்பிப்பது பின்னர் அதற்கு அடிமையாகவே மாறி விடுகின்றனர்.

நாடகங்களில் காட்டப்படும் பெண்கள் ஒன்றில் எந்தக் கொலை பாதகத்திற்கும் அஞ்சாத வில்லியாகவும், அடுத்தவரின் குடும்பத்தில் புகுந்து



குழப்பம் விளைவிப்பவராகவும் பேராசைக்காரியாகவும் குடும்பத்தைக் கவனிக்காத ஒருத்தியாகவும் காட்டப்படுவார், அல்லது எவ்வளவு சித்திரவதை செய்தாலும் திருப்பிக் கேட்காதவளாக, மிகவும் நல்லவளாகக் காட்டப்படுவாள். இப்படிப் பட்ட பெண்தான் குடும்பத்திற்கு உகந்த பத்தினி என்ற நாடகங்களை ஆர்வத்துடன் பார்ப்பதால் என்ன நன்மை விளையப் போகிறது? பிள்ளைகள் கூட இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற தப்பான அபிப்பிராயம் கொள்ளவே வழிவகுக்கும்.



முன்பு பெண்கள் சந்திக்கும் போது, தமக்கான பொருளாதார வாழ்வை மேம்படுத்தும் திட்டங்கள் பற்றி, பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி பற்றி பலமுற்போக்கான கருத்துக்களை பேசினார்கள். ஆனால் இன்று பெண்கள் சந்திக்கும் போது, ஏன் தொலைபேசி உரையாடலில்கூட இத் தொலைக் காட்சி தொடர்களைப்பற்றியே பேசி, அதை அக்குவேறு ஆணி வேராக ஆராய்ந்து தம் மனக் குமுறல்களை மணிக்கணக்காகப் பேசுவதைப் பார்க்க முடிகிறது.

வீட்டிலிருக்கும் வயது வந்தவர்களுக்கான தேவைகளைக்கூட அரைகுறையாகச் செய்துவிட்டு நாடகங்களில் மூழ்கிக் கிடப்பதாலும், நாடகங்களில் வரும் பாத்திரமாக தம்மைக் கற்பனை செய்து நிஜ வாழ்க்கை வேறாக இருக்கும்போது அழுது புலம்பி தம் நிம்மதியை இழப்பதாலும் எதுவும் விளையப் போவதில்லை. நாம் கடந்து வந்த பாதை நீண்டது, கரடுமுரடானது. வாழ்க்கையை மேலும் மேலும் சிக்கலுக்குள் தள்ளாமல் பெண்கள் தம்மையும் தம் உறவுகளையும் காத்துக் கொள்வார்களா?

# மனித உரிமைகளின் தற்கால நிலைமை

## மனித உரிமைகள் - எங்கு பிழை

பாகம் – 4

மனித உரிமைகள் பிரகடனப்படுத்திய காலத்திலிருந்து இன்றுவரை மனித உரிமை மீறல்கள் அதிகரித்தும் மோசமாகியும் வந்திருக்கிறதே அல்லாமல் நிலைமை சீராகி வரவில்லை என்பதை பாகம்-3 இல் பார்த்தோம். இது ஏன் என்பதற்கான சிலர் சொல்லும் கருத்துக்களை இந்த இறுதி ஆக்கத்தில் பார்க்கலாம். இவர்கள் சொல்லும் விளக்கங்களை சுருக்கமாக சொல்வதானால், இன்றைய மனித உரிமைகள் என்ற கருத்திற்கும் இன்றைய உலக முதலாளித்துவ முறைக்கும் நெருக்கமான உறவு உண்டு. இம்முறையின் கீழ் மனித உரிமைகள் என்று சொல்லப்பட்டவைகளை எல்லா மனிதர்களும் அடையும் சாத்தியமே இல்லை என்பதுதான். பேராசிரியர் எரிக் பொஸ்னனரின் "The Twilight of Human Rights Law" என்ற நூலின் பாகம்-3 இலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நூல் இவருடைய இக்கருத்தை மேலும் விளக்குகிறது. நாட்டின் வளங்களை எவ்வாறு நாட்டு மக்களுக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்பதில் நாடுகளிடையே கருத்தொருமை இல்லாததால், அவர்கள் மனித உரிமை சாசனங்களை வகுத்த போது தமக்கு இக்கட்டு வரக்கூடிய கருத்துகளை தவிர்த்து வேண்டுமென்றே துல்லியமற்ற சாசனங்களை உருவாக்கியிருக்கிறார்கள். இவர்கள் உருவாக்கிய சாசனங்கள் ஏறக்குறைய வாழ்க்கையின் எல்லா பகுதிகளையும் பற்றி மனித உரிமைகளை வகுத்திருக்கிறது. ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்தும் வழிகள் மிகவும் பலமற்றதாகவே வைத்திருக்கிறார்கள்.

யுகே-கார்டியன் பத்திரிகையில் இதை இவ்வாறு மேலும் விளக்குகிறார்.

ந. மாலதி

"மனித உரிமை பிரகடனத்தின் பலவீனங்கள் அதன் ஆரம்பத்திலேயே தெரிந்தது. இப்பிரகடனம் கட்டாயமாக பின்பற்ற வேண்டிய ஒரு ஒப்பந்தம் கிடையாது. அதை உருவாக்கியவர்கள் இதை அப்படி கருதவில்லை. ஐநா பொதுச்சபைதான் இதை பிரகடனப்படுத்தியது. இதற்கு சர்வதேச சட்டங்கள் உருவாக்கும் அதிகாரத்தை ஐநா சாசனம் கொடுக்கவில்லை. அதுமட்டுமல்ல மனித உரிமைகள் தெளிவற்றதாகவே உள்ளன. அதை பலவிதமாக பொருள்கொள்வதற்கு இடமிருக்கிறது. கட்டாயமான சர்வதேச சட்டங்கள் இருப்பதை நாடுகள் விரும்பவுமில்லை. அமெரிக்காவில் இனரீதியாக அக்காலத்தில் மக்கள் பிரிக்கப்படுவதை அகற்றுவதற்கு அது சம்மதிக்கவில்லை. பிரித்தானியாவும் பிரான்சும் தங்கள் காலனிகளுக்கு விடுதலை கொடுப்பதற்கு சம்மதிக்கவில்லை. பல நாடுகள் இப்பிரகடனத்திற்கு ஆதரவாக வாக்களிக்காமல் தவிர்த்தன.

மனித உரிமை பிரகடனத்தின் வார்த்தைகள் எழுச்சி மிக்கதாக இருந்தாலும் அது உலக உறவுகளில் ஒரு பெரிய மாற்றத்தை கொண்டுவரப்போகிறது என்று எவரும் நம்பவில்லை. வாக்காளர்கள், அரசியல்வாதிகள், அறிவுசீவிகள் எவரும் அது அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்கும் அடிப்படையாகவும் கருதவில்லை.

ஆரம்பத்திலேயே இப்பிரச்சனையின் மையப்பொருளாக அமெரிக்காவுக்கும் சோவியத்குடியரசுக்கும் ஏற்பட்ட முரண்கள் இருந்தன. அமெரிக்கா மனித உரிமைகளாக அரசியல் உரிமைகளை, அதாவது வாக்குரிமை, பேச்சுரிமை, சட்டத்திற்கு அப்பால் கைதாகாத உரிமை, சமய உரிமை போன்றவற்றை முன்வைத்தன. சோவியத்குடியரசு மனித உரிமைகளாக வேலைக்கான உரிமை, வைத்திய சேவைக்கான உரிமை, கல்விக்கான உரிமைகளை முன்வைத்தன. அத

னால்தான் மனித உரிமை பிரகடனம் 18 ஆண்டுகளுக்கு பின் இரண்டாக ICCPR (1966)-சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான ஒப்பந்தம் மற்றும் ICESCR (1966) – பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகளுக்கான ஒப்பந்தம்) பிரிக்கப்பட்டது.

"மனித உரிமைகள் என்னும் புதிர்" என்ற நூலில் பேராசிரியர் Gary Teeple இதை இவ்வாறு விளக்குகிறார்.

"சர்வதேச மனித உரிமை பிரகடனத்தில் சொல்லப்பட்ட உரிமைகளை கொண்டிருப்பதில் மனிதர்கள் எல்லோரும் சமம் என்று சொல்லும் போது அச்சம நிலையை அடைவதற்கான வழிகளை வரையறுக்கவில்லை. உண்மையில் அதை அடைவதற்கான வழிகள் ஒருவருடைய செல்வத்தில்தான் தங்கியிருக்கிறது. இதனால் இச்சமஉரிமைகள் ஒரு ஏமாற்றும் போக்கையே கொண்டிருக்கிறது. இவ்வுரிமைகளை எல்லோரும் கொண்டிருக்கிறார்கள் என்றால் எல்லோரும் சமமானவர்கள் என்பது கிடையாது.

மனிதஉரிமை அமைப்புக்களும் எந்த உரிமைகளுக்காக தாம் இயங்குகிறோம் என்பதில் வேறுபடுகிறார்கள். உதாரணமாக சர்வதேச மன்னிப்பு சபை தனிமனிதர்களின் உரிமைகளை மட்டுமே கையிலெடுக்கும். ஒட்டுமொத்த ஒழுங்குமுறையை அது கண்டிக்காது. ஆனால் இயற்கையாகவே உரிமைகள் எல்லாம் தனிப்பட்டவை அல்ல. ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டவை. எல்லாருக்கும் மனித உரிமைகள் உண்டு என்று UDHR பிரகடனப்படுத்தியது உலகில் முதல்முறையாக நடந்தது. ஆனாலும் செப்டம்பர்-11 (9/11) தாக்குதலுக்குப் பின்னர் நடந்தவை ஏனைய விடங்களில் மனித உரிமைகளின் தங்குநிலையை உறுதிப்படுத்தியது. இச்சம்பவமும் அதன் பின்னர் நடந்தவையும் UDHR உலக முதலாளித்துவத்தின் கீழ் அடையமுடியாது என்பதை கோடிடுகின்றன. கார்பரேட் அல்லாதவற்றின் சிவில், அரசியல், சமூக உரிமைகளை விட கார்பரேட்டுகளின் உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதானது நீதியான அரசை நடத்துவதற்கான வழியை அடைத்துவிட்டது."

பாகம்-3 இல் குறிப்பிட்ட, வெஸ்ட் மினிஸ்டர் பல்கலைக்கழகத்தில் சட்ட கல்லூரி பேராசிரியராக இருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ராதா டி சொய்சா 'What is Wrong with Rights' என்ற வேறொரு நூலை அண்மையில் வெளியிட்டார். அதுபற்றி அவர் கொடுத்த நீண்ட ஆங்கில நேர்காணலை இங்கு பார்க்கலாம். அதில் அவர் கூறிய சில கருத்துக்கள்.

"சொத்துரிமையும் மனிதவுரிமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் தான். சொத்துரிமையும் உழைப்பும் நெருங்கிய உறவுள்ளவை என்பதை சமூகங்கள் ஏற்று வந்திருக்கின்றன. இரண்டாம்




உலகப் போரின் பின்னர் இந்த தொடர்பு அறுக்கப்பட்டுவிட்டது. மனிதவுரிமைக்கும் சொத்துரிமைக்கும் உள்ள உறவை மீண்டும் கொண்டுவரவேண்டும்.

எல்லாவற்றையும், சமூக உறவுகள் உட்பட, சொத்தாக நோக்கும் போக்கை இப்போது பார்க்கிறோம். உதாரணமாக குழந்தை பெறுவது பெண்களின் ஒரு தகைமை. இப்போதோ பெண்ணின் கருப்பையையும் கொடுத்து வாங்கக்கூடிய ஒரு சொத்தாக மாற்றப்பட்டுவிட்டது. அதேபோல ஆசிரியர்-மாணவர் உறவும் அன்று மதிப்பிற்குரிய முக்கியமான சமூக உறவாக கருதப்பட்டது. இன்றோ பல்கலைக்கழகங்கள் மாணவர்களை நுகர்வோராக கருதுகிறது. அறிவு விற்பனைக்குரிய பொருளாக்கப்பட்டுவிட்டது. இங்கெல்லாம் உரிமை என்ற கருத்தும் சேர்ந்தே வருகிறது. ஏனெனில் உரிமை இல்லாமல் ஒன்றை சொத்தாக கணிக்க முடியாது.

UDHR பிரகடனப்படுத்தப்பட்ட காலத்தில், சொத்துரிமையில் சமூக உறவுகளும் விற்பனைக்குரிய பொருளாக்கப்பட்டுவிட்டன. ஆலைத்தொழிற்சாலைகளும் இயற்கையானதாக ஆக்கப்பட்டுவிட்டன. இதன் பின்னர் தனியார் சொத்துரிமை இல்லாத உலகை எம்மால் கற்பனை கூடசெய்ய முடியாத நிலைக்கு நாம் வந்துவிட்டோம். இவையெல்லாம் இயற்கையானதாக ஆக்கப்பட்டு விட்டதால், எப்படியோ இப்போ எமக்கு மனிதவுரிமைகள் தேவைப்படுகின்றன. இதற்கும் பொருளாதார உரிமை-

க்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்பது போல. இதுதான் பிரச்சனையின் மையம். சமூக, கலாச்சார மற்றும் ஏனைய உரிமைகள் ஒரு வெற்றிடத்தில் இருந்து வரவில்லை. கலாச்சாரம் உண்டானால் அதன் பின் ஒரு பொருளாதார அடித்தளம் உண்டு. மக்களுக்கு உணவு தேவை. குழந்தைகளின் கற்றலுக்கு பள்ளிகள் தேவை. இவற்றிற்கான பொருளாதார அடித்தளம் இல்லாமல் கலாச்சாரமே இல்லை. தனிமனித உரிமைகளும் இல்லை. ஐ.நா உருவாக்கப்பட்ட போது ஏறக்குறைய 30 உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்டன. இப்போ 300 அதிகமான உரிமைகள் உள்ளன. அப்படியானால் அன்றைக்கு இருந்ததை விட இப்போ மக்களுக்கு அதிக உரிமைகள் இருக்கின்றனவா? ஒரு உழவன் செல்வந்தனாக இல்லாவிட்டாலும் தனது குடும்பத்திற்கு உணவு கொடுக்க அவனால் முடிகிறது. அத்தொழிலை செய்யும் நிலத்தையும் சொத்துரிமை ஆக்கிவிட்டால் உழவன் என்ன செய்யலாம். உணவு உரிமை உண்டுதான். ஆனால் அதை வாங்க பணம் வேண்டும். சில சமயங்களில் ஏராளமான உணவு சேகரிக்கப்பட்டு இருந்தும் மக்கள் உணவை வாங்க பணமில்லாமல் செத்துப்போகிறார்கள்.

உழவனும் உலகிலேயே மிகப்பெரிய உணவு கார்பரேட்டான மொசன்ரோவும் தண்ணீர் உரிமைக்கு சமதளத்தில் போட்டி போடுகிறார்கள். எமது சட்டங்களிலும் சமூகத்திலும் கார்பரேட்டும் ஒரு மனிதரும் சமதளத்தில் வைக்கப்படுகிறார்கள். சட்டத்திலும் இருவருக்கும் மனிதவுரிமைகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் மொன்சன்ரோவின் வயல்கள் ஒரு உழவனின் வயலோடு ஒப்பிட முடியாத அளவு பெரிது. ஒரு கார்பரேட் நிலத்தை வாங்கும் போது அதில் உள்ள நீரையும் சேர்த்தே வாங்கி விடுகிறது. ஒரு கார்பரேட்டையும் ஒரு தனிமனிதரையும் சட்டத்தில் ஒரே மாதிரி பார்ப்பதென்பதே எமக்கு பெரும் குழப்பங்களை தருகிறது."

இவ்வாறு தனது நூலைப்பற்றி நேர்காணலில் பேசுகிறார் பேராசிரியர் ராதா டி சொய்சா.

இதுவரை தொடராக வந்த நான்கு பாகங்களில்,

மனித உரிமைகள் என்ற கருத்தாக்கம் இல்லாமலே நீதியை நிலைநாட்டும் முயற்சியோடு மனிதர்கள் 100 ஆண்டுகளுக்கு முன்வரை வாழ்ந்ததையும், 70 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய UDHR என்ற ஐநாவின் மனித உரிமை பிரகடனமும் தொடர்ந்த பல பிரகடனங்களும், மனித உரிமைகள் என்ற கருத்தாக்கத்தின் தோற்றத்திற்கு 70 ஆண்டுகளுக்கு பின்னரும் அது கொடுத்துவரும் ஏமாற்றங்களையும் மற்றும் எதிர்பார்த்த நன்மைகளை அது கொண்டுவராதற்கு அதன் அடிப்படை தத்துவமே காரணம் என்பதையும் பார்த்தோம்.

**இத்துடன் இத்தொடர் முற்றுப் பெறுகிறது.**



எழுத்தாளர் சுஜாதா

# தோற்றுப் போகலாம்



தஞ்சையில் இருந்து, சென்னைக்கு பத்திரிகை பணிக்கு வந்த போது நல்ல சம்பளம்தான். ஆனாலும் ஊதாரி. வீட்டுக்கு போன் போட்டு, ஏதாவது பொய் சொல்லி, “ரெண்டாயிரம் மணியார்டரில் அனுப்புங்கப்பா” என்பேன். (அப்போது நெட் பேங்கிங் கிடையாது) அப்பாவும் உடனடியாக அனுப்பி விடுவார். (சம்பளத்தைவிட அதிகமாக அப்பாவிடம் வாங்கியிருக்கிறேன்.)

மணியார்டரில் பணம் அனுப்பும் போது, அந்த / பாரத்தில் சில வரிகள் ஆங்கிலத்தில் எழுதி அனுப்புவார் அப்பா. (ஆங்கிலத்திலும் மிகப் புலமை பெற்றவர்) அதைக் கையால் எழுதாமல், யாரிட மாவது தட்டச்சி அனுப்புவார். அது அவரது வழக்கம்.

ஒவ்வொரு முறையும், “மை டியர் சன்.. (my dear son)” என்று ஆரம்பிக்கும் அந்த குறுங் கடிதம். ஒரு முறை மணிஆர்டர் வந்த போது அதில் தட்டச்சியிருந்த வார்த்தையைப் பார்த்து அதிர்ந்தேன். மை டியர் சன் (my dear son) என்பதற்கு பதிலாக மை டியர் சின் ( my dear sin) என்று தட்டச்சியிருந்தது.

ஆங்கிலத்தில் Sin என்றால் “பாவம்” என்று பொருள். அப்பா வேண்டுமென்றே அப்படி தட்டச்சு செய்ய சொல்லியிருக்க மாட்டார். ஆனாலும் “சின்” என்ற வார்த்தை மனதை ஏதோ செய்தது. அந்த மணியார்டர் பணத்தை வாங்காமல் திருப்பி அனுப்பிவிட்டேன். அப்பாவுக்கு போய்ச் சேர்ந்தது பணம். அவருக்கு அதிர்ச்சி. உடனடியாக என் அலுவலகத்துக்கு தொலை பேசியில் பேசினார்.

“ஏம்பா பணம் திரும்பி வந்துருச்சு” என்றார் பதட்டமாக. அப்பாவிடம் எப்போதுமே வெளிப்படையாகவே பேசுவேன்: “மைடியர் சின் அப்படின்னு இருந்துச்சுப்பா. அது சரிதானேன்னு தோணுச்சு அதான் “ என்றேன்.

அப்பா சிரித்தார். நான் அவரை மிக கவனித்திருக்கிறேன். பெருந்துன்ப நேரங்களில் அவர் சிரிக்கவே செய்திருக்கிறார். அப்படியானதொரு துயரத்தை வெளிப்படுத்திய அந்த சிரிப்பை இனம் கண்டு கொண்டேன். அப்படியே போனை வைத்து விட்டார் அப்பா. அப்போது நான் பணியாற்றியது, இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தில் இருந்து வந்துகொண்டிருந்த தமிழன் எக்ஸ்பிரஸ் இதழில்.

மறு நாள் காலை.. அலுவலகத்ததில் இருந்த எனக்கு செக்யூரிட்டியிடமிருந்து (இன்டர்காம்) அழைப்பு. என்னைப் பார்ப்பதற்கு அப்பா வந்திருப்பதாக தகவல் சொன்னார்.

இரண்டாவது மாடியிலிருந்து ஓடி வந்தேன்.

செக்யூரிட்டி அலுவலகத்தில் அப்பா அமர்ந்திருந்தார். உள்ளுக்குள் ஏதோ செய்தாலும், சாதாரணமாக முகத்தை வைத்தபடி, “என்னப்பா திடீர்னு..” என்றேன்.

அப்பா என் தலைவருடி, “தம்பி.. அப்பா உன்னை சின்.. அதான் பாவம்னு நினைப்பேனா..? உனக்கென்ன ராஜா. நீதான் என் சொத்து. அந்த டைப் ரைட்டிங்காரர் ஏதோ அவசரத்துல தப்பா டைப் அடிச்சுட்டார். இதுக்கெல்லாமா வருத்தப்படுறது? பணத்தை திருப்பி அனுப்பிட்டியே.. சிரமப்படுவேல்ல. அதான் கொடுக்க வந்தேன்” என்றார் அப்பா.

முட்டிக் கொண்டு வந்த அழுகையை கட்டுப் படுத்திக் கொண்டு ஏதேதோ பேசினேன். யோசித்துப் பார்க்கையில் பிள்ளைகள் என் போன்றோர், பெற்றவர்களுக்கு “சின்” என்றுதான் தோன்றுகிறது.

ஆனால், அப்பாக்கள் வரம்.

தாயிடம் நிரூபியுங்கள் - கடைசி வரை அன்பாக இருப்பேன் என்று.

தந்தையிடம் நிரூபியுங்கள் - கடைசி வரை உங்கள் பெயரை காப்பாற்றுவேன் என்று.

மனைவியிடம் நிரூபியுங்கள் - கடைசி வரை என் காதல் உனக்கானது மட்டும் என்று.

சகோதரனிடம் நிரூபியுங்கள் - கடைசி வரை உனக்கு உறுதுணையாய் இருப்பேன் என்று.

சகோதரியிடம் நிரூபியுங்கள் - கடைசி வரை உனக்கு செய்யும் சீர் ஒரு சுமையே இல்லை என்று.

மகனிடம் நிரூபியுங்கள் - கடைசி வரை உலகமே எதிர்த்தாலும் நான் உன் பக்கம் என்று.

மகளிடம் நிரூபியுங்கள் - கடைசி வரை உன் கண்ணில் நீர் வழிந்தால் என் கண்ணில் ரத்தம் வரும் என்று.

வேறு எவருக்கு நீங்கள் எதை நிரூபித்தாலும் .

அது கடலில் கொட்டிய பெருங்காயமே.

தோற்று போனால் வெற்றி கிடைக்குமா ?

அம்மாவிடம் தோற்று போ, அன்பு அதிகரிக்கும்..

அப்பாவிடம் தோற்று போ, அறிவு மேம்படும்..

துணையிடம் தோற்று போ, மகிழ்ச்சி இரட்டிப்பாகும்..

பிள்ளையிடம் தோற்று போ, பாசம் பன்மடங்காகும்..

சொந்தங்களிடம் தோற்று போ, உறவு பலப்படும்..

நண்பனிடம் தோற்று போ, நட்பு உறுதிப்படும்..

ஆகவே தோற்று போ,

தோற்று போனால் வெற்றி கிடைக்கும்

அன்புடன் வாழுங்கள்!

# தமிழின் சிறப்பு

என்னய்யா சும்மா தமிழ் தமிழ்- என்று? அப்படி என்னதான் இருக்கிறது அதில்? - என்று எவராவது கேள்வி கேட்கட்டும். பதில் கொடுங்கள்....

இதுதான் தமிழ் ! அனைத்தையும் படிக்க ஒரு பிறவி போதாது. பெயர்களையாவது படித்து அறிவோம்....




1. தேவாரம்
2. திருவாசகம்
3. திருமந்திரம்
4. திருவருட்பா
5. திருப்பாவை
6. திருவெம்பாவை
7. திருவிசைப்பா
8. திருப்பல்லாண்டு
9. கந்தர் அனுபூதி
10. இந்து புராணம்
11. பெரிய புராணம்
12. நாச்சியார் திருமொழி
13. ஆழ்வார் பாசுரங்கள்

போன்ற மிகச் சிறந்த பக்தி இலக்கியங்கள்..!


1. நற்றிணை
2. குறுந்தொகை
3. ஐங்குறுநூறு
4. அகநானூறு
5. புறநானூறு
6. பதிற்றுப்பத்து
7. பரிபாடல்
8. கலித்தொகை

என்னும் "எட்டுத்தொகை" சங்க நூல்கள்.. !




1. திருமுருகாற்றுப்படை
2. சிறுபாணாற்றுப்படை
3. பெரும்பாணாற்றுப்படை
4. பொருநராற்றுப்படை
5. முல்லைப்பாட்டு
6. மதுரைக்காஞ்சி
7. நெடுநல்வாடை
8. குறிஞ்சிப் பாட்டு
9. பட்டினப்பாலை
10. மலைபடுகடாம்

என்னும் "பத்துப்பாட்டு" சங்க நூல்கள்....!




1. திருக்குறள்
2. நாலடியார்
3. நான்மணிக்கடிகை
4. இன்னாநாற்பது
5. இனியவை நாற்பது
6. கார் நாற்பது
7. களவழி நாற்பது
8. ஐந்திணை ஐம்பது
9. திணைமொழி ஐம்பது
10. ஐந்திணை எழுபது
11. திணைமாலை நூற்றைம்பது
12. திரிகடுகம்
13. ஆசாரக்கோவை
14. பழமொழி
15. சிறுபஞ்சமூலம்
16. முதுமொழிக் காஞ்சி
17. ஏலாதி
18. இன்னிலை

என்னும் பதினெண்கீழ்க்கணக்கு நீதி நூல்கள்...!

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை
3. சீவக சிந்தாமணி
4. வளையாபதி
5. குண்டலகேசி

போன்ற ஐம்பெருங் காப்பியங்கள்... !




1. அகத்தியம்
2. தொல்காப்பியம்
3. புறப்பொருள் வெண்பாமாலை
4. நன்னூல்
5. பன்னிரு பாட்டியல்

போன்ற இலக்கண நூல்கள் மற்றும்

6. இறையனார் களவியல் உரை

எனும் உரைநூல்..!

1. கம்பராமாயணம்-வழிநூல்.

1. முத்தொள்ளாயிரம்
2. முக்கூடற்பள்ளு
3. நந்திக்கலம்பகம்
4. கலிங்கத்துப்பரணி
5. மூவருலா
போன்ற எண்ணற்ற சிற்றிலக்கிய வகைகள்...!

*ஒரு மொழியின் மிகச்சிறந்த பண்பே செம்மொழிக் கான கீழ்க்கண்ட பதினோரு தகுதிகளைக் கொண் டிருப்பதுதான்...*

1. தொன்மை
2. தனித்தன்மை (தூய்மைத் தன்மை)
3. பொதுமைப் பண்புகள்
4. நடுவுநிலைமை
5. தாய்மைத் தன்மை
6. கலை பண்பாட்டுத் தன்மை
7. தனித்து இயங்கும் தன்மை
8. இலக்கிய இலக்கண வளம்
9. கலை இலக்கியத் தன்மை
10. உயர் சிந்தனை
11. மொழிக் கோட்பாடு.


இந்தப் பதினோரு பண்புகளையும் கொண்ட உலகின் மிக மூத்தமொழி எம் தாய்மொழி தமிழ்!!

சமய குரவர்கள்.

1. திருஞானசம்பந்தர்
2. திருநாவுக்கரசர்
3. சுந்தரமூர்த்தி சுவாமிகள்
4. மாணிக்கவாசகர்

சைவம் வளர்த்தோர்

1. சேக்கிழார்
2. திருமூலர்
3. அருணகிரிநாதர்
4. குமரகுருபரர்




பன்னிரண்டு ஆழ்வார்கள்.

1. பொய்கையாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்
4. திருமழிசை ஆழ்வார்
5. நம்மாழ்வார்
6. மதுரகவி ஆழ்வார்
7. குழசேகராழ்வார்
8. பெரியாழ்வார்
9. ஆண்டாள் நாச்சியார்
10. தொண்டரடிப் பொடியாழ்வார்
11. திருப்பாணாழ்வார்
12. திருமங்கையாழ்வார்

தமிழ்ப் பெரும் புலவர்கள்

அகம்பன் மாலாதனார்
அஞ்சியத்தை மகள் நாகையார்
அஞ்சில் அஞ்சியார்
அஞ்சில் ஆந்தையார்
அடைநெடுங்கல்வியார்
அணிலாடு முன்றிலார்
அண்டர் மகன் குறுவழுதியார்
அதியன் விண்ணத்தனார்
அதி இளங்கீரனார்
அம்மூவனார்
அம்மெய்நாகனார்
அரிசில் கிழார்
அல்லங்கீரனார்
அழிசி நச்சாத்தனார்
அள்ளூர் நன்முல்லையார்
அறிவுடைநம்பி
ஆரியன் பெருங்கண்ணன்
ஆடுதுறை மாசாத்தனார்
ஆதிமந்தி
ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்
ஆலங்குடி வங்கனார்
ஆலத்தூர் கிழார்
ஆலம்பேரி சாத்தனார்
ஆவூர்கிழார் மகனார் கண்ணனார்
ஆவூர் காவிதிகள் சகாதேவனார்
ஆவூர்கிழார்
ஆலியார்
ஆவூர் மூலங்கீரனார்
இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்
இடைக்காடனார்
இடைக்குன்றூர்கிழார்
இடையன் சேந்தன் கொற்றனார்
இடையன் நெடுங்கீரனார்
இம்மென்கீரனார்
இரணியமுட்டத்து பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்.
இருங்கோன் ஒல்லையன் செங்கண்ணனார்
இருந்தையூர்க் கொற்றன் புலவன்
இரும்பிடர்தலையார்
இளங்கீரந்தையார்
இளங்கீரனார்
இளநாகனார்
இளந்திரையன்
இளந்தேவனார்
இளம்புல்லூர்க் காவிதி
இளம்பூதனார்
இளம்பெருவழுதி

இளம்போதியார்
இளவெயினனார்
இறங்குடிக் குன்றநாடன்
இறையனார்
இனிசந்த நாகனார்
ஈழத்துப் பூதந்தேவனார்
உகாய்க் குடிகிழார்
உக்கிரப் பெருவழுதி
உமட்லீர் கிழார் மகனார் பரங்கொற்றனார்
உம்பற்காட்டு இளங்கண்ணனார்.
உருத்திரனார்
உலோச்சனார்
உவர்கண்ணூர் புல்லங்கீரனார்
உழுந்தினைம் புலவர்
உறையனார்
உறையூர் இளம்பொன் வாணிகனார்.
உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்.
உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார்.
உறையூர்ச் சல்லியங் குமரனார்.
உறையூர்ச் சிறுகந்தனார்
உறையூர்ப் பல்காயனார்
உறையூர் மருத்துவன் தாமோதரனார்
உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
ஊட்டியார்
ஊண்பித்தை
ஊண்பொதி பசுங்குடையார்
எயிற்றியனார்
எயினந்தையார்
எருமை வெளியனார்
மகனார் கடலனார்
எரீப்பன்றி நாகன் குமரனார்
ஐயாதி சிறு வெண்திரையார்
ஐயூர் முடவனார்
ஐயூர் மூலங்கீரனார்
ஒக்கூர் மாசாத்தனார்
ஒக்கூர் மாசாத்தியார்
ஒருசிறைப் பெரியனார்
ஒரூத்தனார்
ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்.
ஓதஞானி
ஓதலாந்தையார்
ஓரம்போகியார்
ஓரிற்பிச்சையார்
ஓரேர் உழவர்
ஔவையார்
............
கங்குல் வெள்ளத்தார்
கச்சிப்பேடு இளந்தச்சன்
கச்சிப்பேடு காஞ்சிக் கொற்றனார்.
கச்சிப்பேடு பெருந்தச்சனார்.
கடம்பனூர்ச் சாண்டில்யன்
கடலூர்ப் பல்கண்ணனார்
கடியலூர் உருத்திரங்கண்ணனார்




கடுந்தொடைக் காவினார்
கோவர்த்தனர்
கோவூர்க் கிழார்
கோவேங்கைப் பெருங்கதவனார்.
கோழிக் கொற்றனார்
கோளியூர்க் கிழார் மகனார் செழியனார்
கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரன்.
சங்கவருணர் என்னும் நாகரியர்.
சத்திநாதனார்
சல்லியங்குமரனார்
சாகலாசனார்
சாத்தந்தந்தையார்
சாத்தனார்
சிவப்பிரகாசர்
சிறுமோலிகனார்
சிறுவெண்டேரையார்
சிறைக்குடி ஆந்தையார்
சீத்தலைச் சாத்தனார்
செங்கண்ணனார்
செம்பியனார்
செம்புலப்பெயல்நீரார்
செயலூர் இளம் பொன்சாத்தன். கொற்றனார்
செய்திவள்ளுவன் பெருஞ்சாத்தன்
செல்லூர்கிழார் மகனார் பெரும்பூதன் கொற்றனார்
செல்லூர்க்கோசிகன் கண்ணனார்
சேந்தங்கண்ணனார்
சேந்தம்பூதனார்
சேந்தங்கீரனார்
சேரமானெந்தை
சேரமான் இளங்குட்டுவன்
சேரமான் கணைக்கால் இரும்பொறை.
சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய
மாக்கோதை.
சோனாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்.
சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்.
சோழன் நலங்கிள்ளி
சோழன் நல்லுருத்திரன்
தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார்
தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார்
தனிமகனார்
தாமாப்பல் கண்ணனார்
தாமோதரனார்
தாயங்கண்ணனார்
தாயங்கண்ணியார்
தாயுமானவர்
திப்புத்தோளார்
திருத்தாமனார்
தீன்மதிநாகனார்
தும்பிசேர்கீரனார்
துறைக்குறுமாவிற் பாலங்கொற்றனார்.
துறையூர்ஓடைக்கிழார்
தூங்கலோரியார்
தேய்புரி பழங்கயிற்றினார்

தேரதரன்
தேவகுலத்தார்
தேவனார்
தொடித்தலை விழுத்தண்டினர்.
தொண்டி ஆமூர்ச்சாத்தனார்
தொல்கபிலர்
நக்கண்ணையார்
நக்கீரர்
நப்பசலையார்
நப்பண்ணனார்
நப்பாலத்தனார்
நம்பிகுட்டுவன்
நரிவெரூத்தலையார்
நரைமுடி நெட்டையார்
நல்லச்சுதனார்
நல்லந்துவனார்
நல்லழிசியார்
நல்லாவூர்க் கிழார்
நல்லிறையனார்
நல்லுருத்திரனார்
நல்லூர்ச் சிறுமேதாவியார்
நல்லெழுநியார்
நல்வழுதியார்
நல்விளக்கனார்
நல்வெள்ளியார்
நல்வேட்டனார்
நற்சேந்தனார்
நற்றங்கொற்றனார்
நற்றமனார்
நன்பலூர்ச் சிறுமேதாவியார்.
நன்னாகனார்
நன்னாகையார்
நாகம்போத்தன்
நாமலார் மகன் இளங்கண்ணன்
நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார்.
நெடுங்கழுத்துப் பரணர்
நெடும்பல்லியத்தனார்
நெடும்பல்லியத்தை
நெடுவெண்ணிலவினார்
நெட்டிமையார்
நெய்தற் கார்க்கியார்
நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர்க்கிழார்.
நெய்தற்றத்தனார்
நொச்சி நியமங்கிழார்
நோய்பாடியார்
பக்குடுக்கை நன்கணியார்
படுமரத்து மோசிகீரனார்.
படுமரத்து மோசிக்கொற்றனார்.
பதடிவைகலார்
பதுமனார்
பரணர்
............

கடுந்தொடைக் கரவீரன்
கடுவன் இளமள்ளனார்
கடுவன் இளவெயினனார்
கடுவன் மள்ளனார்
கணக்காயன் தத்தனார்
கணியன் பூங்குன்றனார்
கண்ணகனார்
கண்ணகாரன் கொற்றனார்
கண்ணங்கொற்றனார்
கண்ணம் புல்லனார்
கண்ணனார்
கதக்கண்ணனார்
கதப்பிள்ளையார்
கந்தரத்தனார்
கபிலர்
கம்பர்
கயத்தூர்கிழார்
கயமனார்
கருங்குழலாதனார்
கரும்பிள்ளைப் பூதனார்
கருவூர்க்கிழார்
கருவூர் கண்ணம்பாளனார்
கருவூர் கதப்பிள்ளைச் சாத்தனார்.
கருவூர் கலிங்கத்தார்
கருவூர் கோசனார்
கருவூர் சேரமான் சாத்தன்
கருவூர் நன்மார்பனார்
கருவூர் பவுத்திரனார்
கருவூர் பூதஞ்சாத்தனார்
கருவூர் பெருஞ் சதுக்கத்துப் பூதனார்.
கல்பொருசிறுநுரையார்
கல்லாடனார்
கவைமகன்
கழாத்தலையார்
கழார்க் கீரனெயிற்றியனார்
கழார்க் கீரனெயிற்றியார்
கழைதின் யானையார்
கள்ளிக்குடிப் பூதம்புல்லனார்.
கள்ளில் ஆத்திரையனார்
காக்கைப்பாடினடியார் நச்செள்ளையார்
காசிபன் கீரன்
காட்லீர்கிழார் மகனார் கண்ணனார்
காப்பியஞ்சேந்தனார்.
காப்பியாற்றுக் காப்பியனார்.
காமஞ்சேர் குளத்தார்
காரிக்கிழார்
காலெறி கடிகையார்
காவட்டனார்
காவற்பெண்டு
காவன்முல்லையார்.
காவிரிப் பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்.
காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்.
காவிரிப் பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்.

காவிரிப் பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணனார்.
காவிரிப் பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார்.
மகனார் நப்பூதனார்.
கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார்.
கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார்.
கிடங்கில் குலபதி நக்கண்ணனார்.
கிள்ளிமங்கலங்கிழார்
மகனார் சேரக்கோவனார்
கீரங்கீரனார்
கீரந்தையார்
குடபுலவியனார்
குடவாயிற் கீரத்தனார்
குட்டுவன் கண்ணனார்
குட்டுவன் கீரனார்
குண்டுகட் பாலியாதனார்
குதிரைத் தறியனார்
குப்பைக் கோழியார்
குமட்லீர் கண்ணனார்
குமுழிஞாழலார் நப்பசலையார்
குழற்றத்தனார்
குளம்பனார்
குளம்பாதாயனார்
குறமகள் இளவெயினி
குறமகள் குறியெயினி
குறியிறையார்
குறுங்கீரனார்
குறுங்குடி மருதனார்
குறுங்கோழியூர் கிழார்
குன்றம் பூதனார்
குன்றியனார்
குன்றூர்க் கிழார் மகனார்
கூகைக் கோழியார்
கூடலூர்க் கிழார்
கூடலூர் பல்கண்ணனார்
கூவன்மைந்தன்
கூற்றங்குமரனார்
கேசவனார்
கொடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனார்
கொட்டம்பலவனார்
கொல்லன் அழிசி
கொல்லிக் கண்ணன்
கொள்ளம்பக்கனார்
கொற்றங்கொற்றனார்
கோக்குளமுற்றனார்.
கோடைபாடிய பெரும்பூதன்.
கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான்.
கோட்டியூர் நல்லந்தையார்
கோண்மா. நெடுங்கோட்டனார்
கோப்பெருஞ்சோழன்
பராயனார்
பரூஉ மோவாய்ப் பதுமனார்.
பறநாட்டுப் பெருங்கொற்றனார்.
பனம்பாரனார்
பாண்டரங்கண்ணனார்
பாண்டியன். ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன்.
பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார்
பாண்டியன். தலையாலங்கானத்துச்
செருவென்ற நெடுஞ்செழியன்.
பாண்டியன் பன்னாடு தந்தான்.
பாண்டியன் மாறன் வழுதி.
பாரதம் பாடிய பெருந் தேவனார்.
பாரிமகளிர்
பார்காப்பான்
பாலைக் கௌதமனார்.
பாலை பாடிய பெருங் கடுங்கோ.
பாவைக் கொட்டிலார்.
பிசிராந்தையார்
பிரமசாரி
பிரமனார்
பிரான் சாத்தனார்
புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர்கிழார்
புல்லாற்றூர் எயிற்றியனார்
பூங்கணுத் திரையார்
பூங்கண்ணன்
பூதங்கண்ணனார்
பூதபாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு
பூதம்புல்லனார்
பூதனார்
பூதந்தேவனார்
பெருங்கண்ணனார்
பெருங்குன்றூர்க் கிழார்
பெருங்கௌசிகனார்
பெருஞ்சாத்தனார்
பெருஞ்சித்திரனார்
பெருந்தலைச்சாத்தனார்
பெருந்தேவனார்
பெருந்தோட் குறுஞ் சாத்தன்.
பெரும் பதுமனார்
பெரும்பாக்கன்
பெருவழுதி
பேயனார்
பேய்மகள் இளவெயினி
பேராலவாயர்
பேரிசாத்தனார்
பேரெயின்முறுவலார்
பொதுக்கயத்துக் கீரந்தை
பொதும்பில் கிழார்
மகனார் வெண்கண்ணி
பொதும்பிற் புல்லாளல் கண்ணியார்
பொத்தியார்
பொய்கையார்
பொருந்தில் இளங்கீரனார்
பொன்மணியார்
பொன்முடியார்
பொன்னாகன்
போதனார்.

போந்தைப் பசலையார்.
மடல் பாடிய மாதங்கீரனார்
மதுரை அளகர் ஞாழற் கவிஞர் மகனார்
மள்ளனார்.
மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்
மதுரை ஆசிரியர் கோடங் கொற்றனார்.
மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார்.
மதுரை இனங்கௌசிகனார்.
மதுரை இளம்பாலாசிரியன். சேந்தன் கூத்தனார்.
மதுரை ஓலைக்கடைக் கண்ணம்.
புகுந்தாராயத்தனார்.
மதுரை ஓலைக் கடையத்தார். நல்வெள்ளையார்
மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகனார்
மதுரைக் கணக்காயனார்.
மதுரைக் கண்டராதித்தனார்.
மதுரைக் கண்ணத்தனார்
மதுரைக் கவுணியன் பூதத்தனார்.
மதுரைக் கள்ளிற் கடையத்தன். வெண்ணாகனார்
மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார்.
மதுரைக் காருலவியங் கூத்தனார்.
மதுரைக் கூத்தனார்.
மதுரைக் கொல்லன். புல்லன்.
மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்.
மதுரைச் சுள்ளம் போதனார்.
மதுரைத் தத்தங்கண்ணனார்.
மதுரைத் தமிழக்கூத்தனார்.
நாகன் தேவனார்.
மதுரைத் தமிழக் கூத்தனார்.
மதுரைப் படைமங்க மன்னியார்.
மதுரைப் பாலாசிரியர். சேந்தங்கொற்றனார்.
மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார்.
மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார்.
மதுரைப் புல்லங்கண்ணனார்.
மதுரைப் பூதனிள நாகனார்.
மதுரைப் பூவண்ட நாகன் வேட்டனார்.
மதுரைப் பெருங்கொல்லன்.
மதுரைப் பெருமருதனார்.
மதுரைப் பெருமருதிள நாகனார்.
மதுரைப் போத்தனார்.
மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத்தனார்.
மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்
மதுரை மருதங்கிழார் மகன் இளம்போத்தன்
மதுரை வேளாசன்
மருங்கூர்கிழார் பெருங்கண்ணனார்.
மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன் குமரனார்.
மருங்கூர்ப் பாகை சாத்தன். பிரியனார்.
பூதனார்.
மருதம் பாடிய இளங் கடுங்கோ.
மருதனிளநாகனார்.
மலையனார்
மள்ளனார்
மாங்குடிமருதனார்
மாடலூர் கிழார்
மாதீர்த்தன்
மாமிலாடன்
மாமூலனார்
மாயேண்டன்
மார்க்கண்டேயனார்
மாலைமாறன்
மாவளத்தன்.
மாறோக்கத்துக் காமக்கண்ணியார்.
மாறோக்கத்து நப்பசலையார்.
மாற்பித்தியார்.
மிளைக் கந்தன்
மிளைப் பெருங்கந்தன்
மிளைவேள் பித்தன்
மீனெறி தூண்டிலார்
முக்கல் ஆசான் நல்வெள்ளையார்.
முடங்கிக் கிடந்த நெடுஞ் சேரலாதன்.
முடத்தாமக்கண்ணியார்.
முடத்திருமாறன்
முதுகூத்தனார்
முதுவெங்கண்ணனார்
முப்பேர் நாகனார்
முரஞ்சியயூர் முடிநாகராயர்
முள்ளியூர்ப் பூதியார்
மூலங்கீரனார்
மையோடக் கோவனார்
மோசிக்கண்ணத்தனார்
மோசிக்கீரனார்
மோசிக்கொற்றன்
மோசிக்கரையனார்
மோசிசாத்தனார்
மோசிதாசனார்
வடநெடுந்தத்தனார்
வடவண்ணக்கன் தாமோதரன்
வடமோதங்கிழார்
வருமுலையாரித்தி
வன்பரணர்
வண்ணக்கன் சோருமருங்குமரனார்.
வண்ணப்புறக் கந்தரத்தனார்.
வாடாப்பிராந்தன்.
வாயிலான் தேவன்
வாயிலிலங்கண்ணன்
வான்மீகியார்
விட்டகுதிரையார்
விரிச்சியூர் நன்னாகனார்
விரியூர் நன்னாகனார்
வில்லக விரலினார்
விழிகட்பேதை பெருங்கண்ணனார்
விற்றூற்று மூதெயினனார்
விற்றூற்று வண்ணக்கன் தத்தனார்
வினைத் தொழில் சோகீரனார்
வீரை வெளியனார்
வீரை வெளியன் தித்தனார்
வெண்கண்ணனார்

வெண்கொற்றன்
வெண்ணிக் குயத்தியார்
வெண்பூதன்
வெண்பூதியார்
வெண்மணிப்பூதி
வெள்ளாடியனார்
வெள்ளியந்தின்னனார்
வெள்ளிவீதியார்
வெள்வெருக்கிலையார்
வெள்ளைக்குடி நாகனார்
வெள்ளைமாளர்.
வெறிபாடிய காமக் கண்ணியார்.
வேட்டகண்ணன்
வேம்பற்றூர்க்கண்ணன் கூத்தன்
வேம்பற்றுக் குமரன்
ஒட்டக்கூத்தர்.

பெண்பாற் புலவர்கள்

அச்சியத்தை மகள் நாகையார்
அள்ளூரர் நன்முல்லை
ஆதிமந்தி
இளவெயினி
உப்பை / உறுவை
ஒக்கூர் மாசாத்தியார்
கரீனா கண்கணையார்
கவியரசி
கழார் கீரன் எயிற்றியார்
கள்ளில் ஆத்திரையனார்
காக்கை பாடினியார் நச்செள்ளையார்
காமக்கணிப் பசலையார்
காரைக்காலம்மையார்
காவற்பெண்டு
கிழார் கீரனெயிற்றியார்
குட புலவியனார்
குமிழிநாழல் நாப்பசலையார்
குமுழி ஞாழல் நப்பசையார்
குறமகள் / இளவெயினி
குறமகள் / குறிஎயினி
குறமகள் இளவெயினியார்
கூகைக்கோழியார்
தமிழறியும் பெருமாள்
தாயங்கண்ணி - புறம் 250
நக்கண்ணையார்.
நல்லிசைப் புலமை மெல்லியார்.
நல்வெள்ளியார்.
நெட்டிமையார்
நெடும்பல்லியத்தை
பசலையார்
பாரிமகளிர்
பூங்கண்ணுத்திரையார்
பூங்கண் உத்திரையார்
பூதபாண்டியன் தேவியார்
பெண்மணிப் பூதியார்
பெருங்கோப்பெண்டு
பேய்மகள் இளவெயினி
பேயனார்
பேரெயென் முறுவலார்
பொத்தியார்
பொன்மணியார்
பொன்முடியார்
போந்தலைப் பசலையார்.
மதுவோலைக் கடையத்தார்.
மாற்பித்தியார்
மாற்பித்தியார், இயற்பெயர் பித்தி.
மாறோக்கத்து நாப்பசலையார்.
முள்ளியூர் பூதியார்
முன்னியூப் பூதியார்
வரதுங்க ராமன் தேவியார்
வருமுலையாருத்தி.
வில்லிபுத்தூர்க் கோதையார்.
வெண்ணிக் குயத்தியார்.
வெள்ளி வீதியார்.
வெறிபாடிய காமக்கண்ணியர்.

பதினெண் சித்தர்

1. திருமூலர்
2. இராமதேவர்
3. கும்பமுனி
4. இடைக்காடர்
5. தன்வந்திரி
6. வான்மீகி
7. கமலமுனி
8. போகநாதர்
9. குதம்பைச் சித்தர்
10. மச்சமுனி
11. கொங்கணர்
12, பதஞ்சலி
13. நந்திதேவர்
14. போதகுரு
15. பாம்பாட்டிச் சித்தர்
16. சட்டைமுனி
17. சுந்தரானந்த தேவர்
18. கோரக்கர்




இது ஒரு பட்டியல்.

1. அகப்பேய் சித்தர்
2. அழுகணிச் சித்தர்
3. ஆதிநாதர் வேதாந்தச் சித்தர்.
4. சதோகநாதர்

5. இடைக்காட்டுச் சித்தர்
6. குதம்பைச் சித்தர்
7. புண்ணாக்குச் சித்தர்
8. ஞானச்சித்தர்
9. மௌனச் சித்தர்
10. பாம்பாட்டிச் சித்தர்
11. கல்லுளி சித்தர்
12. கஞ்சமலைச் சித்தர்
13. நொண்டிச் சித்தர்
14. விளையாட்டுச் சித்தர்
15. பிரமானந்த சித்தர்
16. கடுவெளிச் சித்தர்
17. சங்கிலிச் சித்தர்
18. திரிகோணச்சித்தர்

இது மற்றொரு பட்டியல். இந்தப் பட்டியலில் நவநாத சித்தர்களும் அடங்குவர்.

1. வான்மீகர்
2. பதஞ்சலியார்
3. துர்வாசர்
4. ஊர்வசி
5. சூதமுனி,
6. வரரிஷி
7. வேதமுனி
8. கஞ்ச முனி
9. வியாசர்
10. கௌதமர் -

இது இன்னொரு பட்டியல். பெரிய ஞானக்கோவை சித்தர்கள் நாற்பத்தெண்மர் என்று இதனிலும் மாறுபட்ட ஒரு பட்டியலைத் தருகின்றது.

1. காலாங்கி
2. கமலநாதர்
3. கலசநாதர்
4. யூகி
5. கருணானந்தர்
6. போகர்
7. சட்டைநாதர்
8. பதஞ்சலியார்
9. கோரக்கர்
10. பவணந்தி
11. புலிப்பாணி
12. அழுகணி
13. பாம்பாட்டி
14. இடைக்காட்டுச் சித்தர்
15. கௌசிகர்
16. வசிட்டர்
17. பிரம்மமுனி
18. வியாகர்
19. தன்வந்திரி
20. சட்டைமுனி
21. புண்ணாக்கீசர்
22. நந்தீசர்
23. அகப்பேய்
24. கொங்கணவர்
25. மச்சமுனி
26. குருபாத நாதர்
27. பரத்துவாசர்
28. கூன் தண்ணீர்
29. கடுவெளி
30. ரோமரிஷி
31. காகபுசுண்டர்
32. பராசரர்
33. தேரையர்
34. புலத்தியர்
35. சுந்தரானந்தர்
36. திருமூலர்
37. கருவூரார்
38, சிவவாக்கியர்
39. தொழுகண்
40. பால சித்தர்
41. சிவஞான பாலய சுவாமிகள்
42. நவநாதர்கள்
*அ.* சத்ய நாதர்
*ஆ.* சதோக நாதர்
*இ.* ஆதி நாதர்
*ஈ.* அனாதி நாதர்
*உ.* வகுளி நாதர்
*ஊ.* மதங்க நாதர்
*எ.* மச்சேந்திர நாதர்
*ஏ.* கஜேந்திர நாதர்
*ஐ.* கோரக்க நாதர்
43. அஷ்ட வசுக்கள்
44. சப்த ரிஷிகள்.

இப்படிச் சித்தர்கள் பட்டியல் கணக்கில்லாமல் பெருகிக்கொண்டே செல்கிறது. கிடைத்தவை இவைமட்டுமே.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எம் முன்னோர்கள் பேசிய இனியமொழி எம் தமிழ்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த நம்மொழியை எவராலும் அழிக்க இயலாது.

*தமிழர் என்று பெருமை கொள்வோம்!!*

சிறுகதை



# நெருப்பில் பூத்த மலர்கள்

*பாரி*

உலகமே ஸ்தம்பித்துப் போனதான உணர்வு. காற்றுப் பைகள் கனத்து மூச்சு உள்ளே போக மறுத்தது. மண்டையினுள் அலார ஒலி. யாரிடம் சொல்வேன்? எப்படியென்று சொல் வேன்? தேகம் அனலாய்க் காந்தியது. தேகமா? என்னுடையதா? அருவெறுப்பு வாந்தியாக வர, கண்ணாடி முன்பு நின்று அழகுக்கு அழகு சேர்த்த என்னுடைய மேனி சாக்கடையில் வீழ்ந்த பூவைப் போல். எத்தனை தடவைகள் சுரண்டிச் சுரண்டிக் குளித்தாலும் போகாத அழுக்கு.

“கடவுளே!! எனக்கு ஏன் இவ்வளவு பெரிய தண்டனை? நான் மனசறிந்து யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்யேல்லையே, ஐயோ..!!”

“ கமலி. அடியே கமலீ.! எத்தினை தரம் கூப்பி டுறது? போனை நோண்டிக் கொண்டு இருந்தால் எதுவுமே காதிலை விழாது.”

அம்மா பெருங்குரலில் திட்டியவாறு கதவைத் திறந்துகொண்டு என்னுடைய அறைக்குள் வந்தா. துள்ளிப்பாய்ந்து எழும்பினேன். நடு மைதா னத்தில் அம்மணமாக நிற்பது போன்ற உணர்வு. உடலெல்லாம் கூசியது. நான் தடுப்பதற்கு முன் ஊத்தை உடுப்புகளை வாரி எடுத்தா.

“ என்னடி இது? ரத்தக்கறை? சட்டை கிழிஞ்சும் கிடக்கு.?”

ஊத்தை உடுப்புகளுக்கிடையில் இதுவும் சரி-யாக அம்மாவின் பார்வையில் விழுந்து விட்டது. அம்மா சந்தேகமாகப் பார்த்தா.

“ நான்.. அது. அது வந்து. அண்டைக்கு நாயள் துரத்தி.. பத்தைக்குள்ள விழுந்தனான் சொ.. சொன்னனான்தானே.”

நெஞ்சுக்குழிக்குள் தடதடப்பு. ஓவென்று கூக்-குரலிட்டு அழவேண்டும் போலிருந்ததை எப்படி அடக்க முடிந்தது என்று புரியவில்லை.

“ ஓம். கால்லயும் கையள்ளையும் கீறல் காயங்களுக்கு மருந்து போட்டனியே..? ஏன் வைச்ச தேத்தண்ணி கூட குடிக்கேல்லை? அதிசயமா போனைக் கூட தொடேல்லை.!!”

“என்னுடைய எந்தக் காயத்துக்கெண்டு மருந்து போடுறது? அம்மா ஆ.

அந்த நாயள் என்னைச் சிதைச்சுப் போட்டா ங்களே அம்மா.!!!!"

மனதினுள் கதறி அழுதேன். யாரிடமும் சொல்ல முடியாது. சொல்லக் கூடாது. தெரிய வந்தால்? குடும்பத்தின் நிலைமையை நினைத்து இதயம் பதறியது.

வீட்டில் நானும் அம்மாவும் தம்பியும் மட்டும் தான். அப்பாவும் அண்ணாவும் வெளிநாட்டிலை இருந்து காசு அனுப்பிக் கொண்டிருக்கினம். எங்கடை வாழ்க்கை முறையே மாறிவிட்டது. நாங்கள் மட்டுமில்லை, அண்டை அயல் எல்லாரும்தான் மாறி விட்டார்கள். முந்தின மாதிரி சமூகம், பந்தம் என்ற உணர்வுகள் அருகிப் போயிட்டுது. எல்லோரும் ஒருமாதிரி 'பந்தா'வாக வாழப் பழகி விட்டினம்.

நாங்களும் புதுவீடு கட்டிக்கொண்டு வந்திட்டம். எந்த வசதிக்கும் குறைவில்லை. நாங்கள் என்ன கேட்டாலும் நடக்கும். முதல்ல அம்மா சுணங்குவா. பிறகு கேட்டதுகளை வாங்கித் தந்திடுவா. பிறகு தெரிஞ்ச ஆக்கள் எல்லாருக்கும் பெருமையாகச் சொல்லிப் புலம்புவா.

' ஐபோன் கேட்டவா. குடுக்காட்டா, பேந்து தகப்பனுக்கு கோவம் வந்திடும்.' என்றோ

'தம்பி மோட்டச்சைக்கிள் கேட்டவன். குடுக்காட்டா இந்தக்காலத்துப் பிள்ளையளைத் தெரியுந் தானே? ஏதேனுஞ் செய்து போடுங்கள்' என்றோ அல்லது

' உந்த தின்ன வழியில்லாமல் கிடந்ததுகளே என்னமாதிரித் திரியுதுகள். எங்கடை பிள்ளையள் வக்கத்தவை மாதிரி இருக்கலாமே?' என்றோ எங்களுடைய வசதியைத் தம்பட்டமடிப்பதில் ஒரு பெருமை. அம்மாவில் கூட சரியான மாற்றம். எந்த நேரமும் ரி.வி யில சீரியல் பார்க்கிறதிலயும் போன் அடிச்சு நகைகள், புடவைகளைப் பற்றி நண்பிகளுடன் கதைப்பதிலும், 'பேஸ்புக்' இல் 'ஸ்ரேரஸ்' போடுவதிலும் இருக்கும் ஆர்வம் வீட்டில் சமைப்பதில் இல்லை. நாங்களும் கவலைப்படுவதில்லை. இப்பதானே.. நினைத்த மாதிரிச் சாப்பாடு எடுக்கலாம்.

எனக்கும் முகநூலில் ஆயிரக்கணக்கான நண்பர்கள். நான் போடும் ஒவ்வொரு பதிவிற்கும் 'லைக்'குகளும் 'கொமென்ட்'டுகளும் வந்து விழும். வெளிநாடு போகும் மட்டும் படிப்பை ஒரு பொழுது போக்காக தொடர்ந்து கொண்டிருக்கிறேன்.

அன்றைக்கும் அப்படித்தான். 'ரியூசன்' முடிந்த பின் நண்பிகளுடன் அரட்டை. நேரம் போனதே



தெரியவில்லை. சைக்கிளை மிதித்தபடி வாழைத் தோட்டத்துப் பாதையால் வந்துகொண்டிருந்தேன். இருட்டிவிட்டது. பின்னால் மோட்டார் சைக்கிள்கள் வரும் சத்தம் கேட்டது. வழி விடுவதற்காக ஓரமாக ஒதுங்கினேன். இரண்டு மோட்டார் சைக்கிள்களில் நான்கு பேர் வந்தார்கள். அதில் ஒருவர் நன்கு தெரிந்தவர்தான். முகநூலில் எனது நண்பரும் கூட.

" என்ன இந்தப் பக்கம்? தனியவோ வந்தனீங்கள்?"

கேட்டவாறே இறங்கினார்.

" ஓம். பிரண்சிட்டைப் போட்டு வரப் பிந்தீட்டுது.."

என்ன நடக்கிறது என்று நான் சுதாகரிப்பதற்கு முன், நான் நண்பன் என்று நினைத்தவனே என்னுடைய வாயைப் பொத்தினான். என்னுடைய துப்பட்டாவினாலேயே என்னுடைய வாயையும் கைகளையும் கட்டி வாழைத்தோட்டத்தின் உட்புறத்துக்கு என்னைத் தரதரவென்று இழுத்துப் போனார்கள். கத்த முடியவில்லை, ஓடமுடியவில்லை. 'இந்த அரக்கர்களிடம் இருந்து என்னைக் காப்பாற்று கடவுளே!' என்று எல்லாக் கடவுளையும் கூப்பிட்டு மன்றாடினேன். நான் புழுவாகத் துடிக்கத்துடிக்க மாறி மாறி என்னைச் சீரழித்தார்கள். உடலும் மனமும் ரணமாக கட்டாந்தரையில் மல்லாந்து கிடந்தேன் நான். என்னைச் சுற்றி மதுவும் காமமும் கலந்த குரல்கள். என்னைக் குதறியவர்களின் குரல்கள். கை கொட்டிச் சிரித்தன. ஏளன



மாக நகைத்தன. முடியாதோ என்று நீண்ட துன்பம் முடிவுக்கு வந்தது.

'வீட்டில சொன்னால்.. ஊருக்குள்ள நாறிப் போவியள். எல்லாரும் தூக்கில தான் தொங்க வேணும்.'

'கண்டவனும் வந்து கதவைத் தட்டுவான்'

'உன்ரை தம்பியை வெட்டிப் போடுவம்'

பல்வேறு வகையான அச்சுறுத்தல்களின் பின் அவர்கள் கிளம்பினர். இனி என்ன நடந்தால்தான் என்ன?

' திறமா வீடியோ எடுத்து வைச்சிருக்கிறம். 'நெற்' இல விட்டால் நல்லா ஓடும். வீட்ட போய் சாக வெளிக்கிட்டாலோ, இல்லை ஆருக்கும் சொன்னாலோ. பேந்து, வீடு வீடாப் படக் காட்சிதான். ஞாபகம் வைச்சிரு.' அவர்கள் இறுதியாகச் சொல்லிவிட்டு போய்விட்டார்கள். நான் எப்படி வீடு வந்தேன் என்பது ஞாபகத்தில் இல்லாமல் நடைப்பிணமாக வீடு வந்தேன்.

அம்மா சீரியலில் முனைப்பாக இருந்தா. என்னையோ, என்னுடைய நிலையையோ திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

" மேசையில சாப்பாடு கிடக்கு. போட்டுச் சாப்பிடு. இண்டைக்கு ஒரு மணித்தியால சிறப்புக் காட்சி. முடிச்சிட்டுத்தான் நான் வருவன்."

நான் என்னுடைய அறைக்குள் புகுந்து தாளிட்டுக் கொண்டேன். நீண்டநேரமாக தேய்த்துத் தேய்த்து குளித்தேன். நிணமும் கண்ணீரும் தண்ணீருடன் கலந்து ஓடின. அழுக்கும் அருவெறுப்பும் போகவேயில்லை.

வெளிச்சத்தில் நிர்வாணமாக நிற்பது போன்ற உணர்வு. இருட்டிலே முடங்கிக் கிடந்தேன். வாழ்வே இருண்டு போனபின் வெளிச்சம் போட்டு என்ன பயன்? கண்ணீரும் வற்றிப் போனது. அருவெறுத்த குரல்கள் மட்டும் என்னுடைய மண்டைக்குள் குடைந்து கொண்டே இருந்தன.

அம்மாக்கு எதுவுமே பிடிபடவில்லை.

" நல்லா இந்தக் குடிநீரைக் குடி. எல்லாம் பறந்துபோம்." என்று குடிநீர் காய்ச்சித் தந்தா.

" ஊரெல்லாம் வருத்தமாக் கிடக்கு. வெளியிலகிளியில திரியாதை."

நான் அறைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தேன். தொண்டைக்குள்ளால் எதுவுமே இறங்கவில்லை. எத்தனையோ வழிகளில் தற்கொலைக்கான முயற்சியை எண்ணிப் பார்ப்பேன். அந்தக் கேவலமான காட்சி எல்லா வீடுகளிலும் படமாக ஓடுவதாக ஒரு பிரமை வரும். அம்மா, அப்பா, அண்ணா, தம்பி எல்லோரும் இறந்து கிடப்பது போலவும், வருவோர் போவோரெல்லாம் இந்த வீட்டைச் சுட்டிக் காட்டி 'நடத்தை கெட்டவளின் வீடு' என்று சொல்லுவது போலவும், நீலப்படமாக என்னுடைய அவலம் ஓடுவதைப் போலவும் தோன்றும்.

"ஐயோ !!!! சந்ததி சந்ததியாக இந்தப் பெயர் தொடருமே..!!"

நாட்கள் யுகங்களாக நகர, உடலின் காயங்கள் காய்ந்து போயின. மனது மட்டும் இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது. தம்பியைக் கூட நான் நேருக்கு நேர் பார்ப்பதில்லை. மனிதத்தின் மீது இருந்த நம்பிக்கை செத்துவிட்டது. ஒருநாள்.. தெருவில் மோட்டார் சைக்கிள் சத்தம். இதயம் படபடவென்று அடிக்க ஒளிந்திருந்து யன்னலால்



பார்த்தேன். அவர்கள்தான். வீட்டையே நோட்டம் விட்டவாறு இரண்டு மூன்று தடவைகள் அப்படியும் இப்படியும் போனார்கள். 'கேற்' அருகில் நின்ற அம்மாவிடம் நலம்கூட விசாரித்தான் ஒருவன்.

ஏதோ நடக்கப் போவதாக உள்ளுணர்வு சொன்னது. அதற்கேற்றாற்போல 'போன்' சிணுங்கியது.

" நாங்கள் சொன்னது போலவே நடந்திருக்கிறாய். பிரச்சனையின் தாக்கம் உனக்கு விளங்கியிருக்கும். இப்ப அடுத்த சுற்று போவமா? பழைய இடத்துக்கே வா."

பூமி பிளந்து என்னை விழுங்கி விடாதா? ஐயோ!!! என்ன செய்யப் போகிறேன்? இனி செய்வதற்கு எதுவுமில்லை. இது முடிவில்லாத ஒரு தொடர்கதையாகப் போகிறது. இனியும் தாங்கிக் கொள்ளும் நிலையில் நான் இல்லை. இறப்பிலாவது தீர்வு கிடைக்குமா? துப்பட்டாவினால் சுருக்குப் போட்டு இறப்பதுதான் ஒரே வழி என்று முடிவெடுத்தேன்.

" மன்னியுங்கோ அம்மா! உங்களை கஸ்ரத்துக்கை விட்டிட்டுப் போறன்."

மனம் அப்படியும் இப்படியுமாக அலைந்தது.

பொறு!!! நான் ஏன் சாக வேணும்? இவங்கள் எத்தனை பேரைச் சிதைத்திருப்பார்கள்? இன்னும் சீரழிக்கப் போகிறார்கள்? இவர்கள் சந்தோசமாக வாழ, எந்தத் தவறும் செய்யாத நாங்கள் அவமானப்பட்டு இறக்க வேண்டுமா? கடவுள் வந்து எவருக்கும் தண்டனை கொடுக்கப் போவதில்லை. இங்கு நாங்கள்தான் கடவுள். நீண்ட யோசனையின் பின், நான் என்னுடைய தற்கொலை முடிவை மாற்றிக் கொண்டேன். ஆதாரங்களுடன் கிளம்பிய போது. கலங்கியிருந்த மனது தெளிந்திருந்தது.



# 3000 ஆண்டுகளானாலும் பிரபாகரன் புகழ் வரலாற்றில் நிலைத்திருக்கும்!



இன்னும் இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளானாலும் பிரபாகரன் நாமம் வரலாற்றில் வாழும். அதனை எவராலும் அழித்துவிட முடியாது, என இலங்கையின் நவசமாஜக் கட்சி பொதுச் செயலாளர் விக்ரமபாகு கருணாரத்ன கூறியுள்ளார்.

தாய்நாட்டு வளங்களை விற்பனைசெய்து பிழைப்பு நடத்தும் அதிபர் மகிந்த ராஜபக்சேவுடன் ஒப்பிடுகையில் தாய்மண் மீது வேலுப்பிள்ளை பிரபாகரன் அதிக பற்றுக் கொண்டிருந்தார் என்றும் அவர் புகழ்ந்துள்ளார்.

பத்திரிகை ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டி:

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், தான் பிறந்த மண்ணுக்காக விடுதலை வேண்டிப் போராடியவர். அவர் தாய் மண்ணுக்காக முள்ளிவாய்க்கால் வரை சென்று தனது உயிரையே கொடுக்கத் துணிந்தவர். அவர் உயிருக்குப் பயந்து ஓடி ஒளியவில்லை. அவரின் குடும்பமே மண்ணுக்காகத் தன்னைத் தியாகம் செய்தது. வரலாற்றில் அவருக்கு நிகரான ஒருவரைப் பார்ப்பது கடினம்.

பிரபாகரன் தமிழர்களின் உரிமைகளையும் அடையாளங்களையும், வளங்களையும் பாதுகாக்கவே போராடினார். தான் பிறந்த மண்ணைக் காப்பதற்கு எந்த அபாயமுனையிலும் நின்று பாடுபட்டார்.

அவரின் கொள்கைகளை நாம் ஏற்கமாட்டோம். அவர் சிற்சில தவறுகளை இழைத்திருந்தாலும் அவர் ஒரு சிறந்த விடுதலைப் போராளி. அதனை நாம் ஒருபோதும் மறுக்க முடியாது.

அவர் தேசத்துரோகி அல்லர். பிரபாகரன் என்ற நாமம் இன்னும் இரண்டாயிரம் மூவாயிரம் வருடங்களுக்கு வரலாற்றில் வாழும். இதனை எவராலும் அழித்துவிடமுடியாது. இது உண்மையும் கூட.

தாய்நாட்டு வளங்களை விற்பனைசெய்து பிழைப்பு நடத்தும் இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்சேவுடன் ஒப்பிடுகையில் தாய்மண் மீது பிரபாகரன் மிக அதிக பற்றைக் கொண்டிருந்தார்.

மக்களை வீதியில் இறக்கிப் போராடித்தான் தேசப்பற்றைக் காட்ட வேண்டுமென்றில்லை. அது மனதில் இருந்தால்போதும். பொருள்களின் விலைகளைத் தொடர்ச்சியாக அதிகரித்து மக்களின் அடிவயிற்றில் அடிக்கும் மகிந்த அரசு முதலில் நிர்வாக முறைமையைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் ஏனைய விடயங்களைப் பற்றிச் சிந்திக்கலாம் பார்க்கலாம்.

இவ்வாறு விக்கிரமபாகு கருணாரத்ன அந்தப் பேட்டியில் கூறியுள்ளார். ராஜபக்சேவை எதிர்த்து இவர் அதிபர் தேர்தலில் போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**– சிங்கள தலைவர் விக்ரமபாகு –**

# சென்பகம்



## எமது தேசியப் பறவை

கறுப்பு உடலையும் காவிநிற (செம்பட்டை) செட்டைகளையும் கொண்ட செண்பகம் காக த்தை விட சற்றுப் பெரியது . சிவப்பு நிற மான கண்களைக் கொண்ட செண்பகம் குயிலின் குடும்பத்தைச் சேர்ந்தது. ஆனால் கூடு கட்டும் வல்லமை உடையது. பகல் வேளைகளில் பனைவேலி ஒரங்களிலும், பூவரசம் மர நிழல் மற்றும் சிறு புதர்களின் அடியிலும் தனித்தும் சோடியாகவும் தரை யில் தத்தி தத்தி மெதுவாக நகர்ந்து போகும் செண்பகம் புழுபூச்சிகளைத் தேடி உண் ணும். சிறு தூரங்களையே பறந்து கடக்கும் ஆற்றல் உடைய செண்பகம் 'குகுக். குகுக்' எனக் கத்தும் ஒலியைக் கொண்டு எளிதில் அதனை இனம் காணமுடியும்.

இதன் உயிரியல் பெயர் Centropus Sinensis ஆகும். காலை வேளைகளில் தம் இறக்கை-களை மேல் நோக்கி விரித்து தனியாகவோ சோடியாகவோ சூரியக் குளியல் மேற்கொ ள்ளும். செண்பகங்கள் பொதுவாக இளஞ் சூட்டு நேரங்களில் மிகச் சுறுசுறுப்பாகக் காணப்படும். இனப்பெருக்கக் காலமாகிய பெப்ரவரி முதல் செப்டம்பர் வரையான காலப் பகுதியில் ஒரு பெண் செண்பகம் தொடர் ந்து 3 முதல் 4 வரையிலான வெண்ணிற முட்டைகளை இட்டு அடைகாக்கும்.

செண்பகம் ஆனது செம்போத்து, குக்கில், செம்புகம், செங்காகம், என்று பல பெயர்களில் பழந்தமிழ் இலக்கியங்களில் விளிக்கப்படு-கிறது. அவற்றுள் சில கீழே..

"கோழியுங் கூவின குக்கில்
குரல்காட்டுந் தாழியு ணீலத்
தடங்கணீர் போதுமினோ
ஆழிசூழ் வையத் தறிவ னடியேத்திக்
கூழை நனையக் குடைந்து குரைபுனல்
ஊழியு மன்னுவா
மென்றேலோ ரெம்பாவாய்".
(யாப்பருங்கலக்காரிகை,
23ஆம் காரிகை உரை மேற்கோள் )

குவளை பூசல்வி ளைத்திடு மங்கயல்
கடுவ தாமெனு மைக்கண் மடந்தையர்
குமுத வாயமு தத்தை நுகர்ந்திசை
பொருகாடை
குயில்பு றாமயில் குக்கில் சுரும்பினம்
வனப தாயுத மொக்கு மெனும்படி
குரல்வி டாஇரு பொற்குட மும்புளகிதமாக
(திருப்புகழ் )
தெரிகணை யெஃகந் திறந்தவர் யெல்லாம்
குருதி படிந்துண்ட காகம் - உருவிழந்து
குக்கிற் புறத்த சிரல்வாய செங்கண்மால்
தப்பியாரட்ட களத்து.
(களவழி நாற்பது-05)

செண்பகம் மயிர்கொட்டிகளை பிடித்து உண்ணும். அருகி வரும் செண்பக இனம் மீண்டும் பெருகுவதால் மயிர்க் கொட்டிக-ளின் தாக்கத்தில் இருந்து நாம் தப்பிக்க முடியும்.

நந்திக்கடலே! நீ ஏன்
என்னோடு கோபம்
விந்தைக்குரிய மௌனமதை
விளங்கவில்லை நானும்...

துள்ளிக்குதிக்கும் புன்சிரிப்பாய்
உன்னுள் ஆர்ப்பரிக்கும் அலைகள்
ஆரவாரமின்றி
ஏன் அமைதியாய்க்கிடக்கின்றன...

நீரின் மடியிலே நீ
சுமந்திருக்கும் பெருநெருப்பு,
தமிழ் வீரப்போர் மரபுகளைப்
பொத்திவைக்கும் உன்பொறுப்பு,
எத்தனை பெரிய எரிமலையின்
மூச்சுக்களை அள்ளிச்
சேர்த்த அரவணைப்பு,

முள்ளிவாய்க்கால் விலைதந்த
படிமங்கள் அவையனைத்தும்
தாங்கிக்கொள்ளும் அருஞ்சிறப்பு...
இத்தனை கொண்டும் எப்படி
நீ மௌனமாய்?..........

**காந்தள்**

